உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்
திங்கள் வெளியீடு.

துணர் ௰௧. { யுவ, புரட்டாசி. } மலர் ௬.


| | | |
|---|---|---|
| க. | நெடுந்தொகைக் குறும்பொருள்<br>திரு. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் | 201 |
| உ. | திருக்குறளுதலிய நெறிமுறை<br>திரு. K. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் | 206 |
| ௩. | நயனநூல் நவநீதம்<br>திரு. Dr. S. அமிர்தலிங்கம் பிள்ளை அவர்கள் | 215 |
| ச. | தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பாராய்ச்சி<br>திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் | 224 |
| ரு. | உரையாசிரியர் ஒருவர், பேராசிரியர் பலர்<br>திரு. E. R. நரசிம்ம அய்யங்கார் அவர்கள் | 231 |
| ௬. | வரருசி கதை<br>திரு. R. பொன்னுசாமி பிள்ளை அவர்கள் | 237 |
| எ. | நன்கொடை<br>பொழிற்றொண்டர். | 240 |


செந்தமிழ்ப்புரவலர்,
த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பொழிற்றொண்டர்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் ௰௧ | யுவ, புரட்டாசி | மலர் ௬ |


உ

## நெடுந்தொகைக் குறும்பொருள்.

வித்துவான், முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், உயர்தரக் கல்லூரி, ஆர்க்காடு.

(முற்றொடர்ச்சி 155-ம் பக்கம்)

### 5. பாலை.

அளிநிலை பொறாஅ தமரிய முகத்தள்
விளிநிலை கொள்ளாள் தமியள் மென்மெல
நலமிகு சேவடி நிலம்வடுக் கொளாஅக்
குறுக வந்துதன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள்
கண்ணிய துணரா அளவை ஒண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்
முளிந்த ஓமை முதையலங் காட்டுப்

பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட் டேய்ப்ப
உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்
மாய்த்த போல மழுகுநுனை தோற்றிப்
பாத்தி யன்ன குடுமிக் கூர்ங்கல்
விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை அதர
பரல்முரம் பாகிய பயமில் கானம்
இறப்ப எண்ணுதிர் ஆயின் அறத்தா
றன்றென மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன வாக என்னுநள் போல
முன்னம் காட்டி முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்றுநினைந் தொற்றிப்
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொ
டாகத் தொடுக்கிய புதல்வன் புன்றலைத்
தூநீர் பயந்த துணையமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை மாமலர்
மணியுரு(வு) இழந்த அணிஅழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே ஒண்டொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதும் நாம்எனினே.

என்பது பொருள்வயிற் பிரியக் கருதிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது. [நாம் தன (தலைவி)க்குச் செய்யுந்] தலையளி நிலையைப் பொறுமையாலே மேவின முகத்தளாயும், போக்கிற்கழைக்கும் நிலையை யுடன்பட்டுக் கொள்ளாளாயும், (நாண் முதலாகிய பண்புகளொழியத் தான்) தனியளாயும், மெல்ல மெல்ல அழகுமிக்க செவந்ததாள்களாலே நிலம் வடுக்கொள்ளச் செய்து அணுக வந்து, தன் கூரிய பற்கள் விளங்கத் தன் வாயிற் சிறிதெழுந்த மெய்யல்லாத (பொய்ம்) முறுவலைச் செய்பவளாகிய ஒள்ளிய நெற்றியையுடையவள் (நாம்) எண்ணியதைத் தான் அறிவதன் முன்னரே (நாம்) ஆள்வினை மேற்கோடலில் (தனக்கு விருப்பஞ்) செல்லாத கருத்துடனே, உலர்ந்த ஓமை (மரஞ்செறிந்த) முதையற் காட்டில்

பளிங்குபோன்ற பலவாய நெல்லிக் காய்கள் உயரத்தைக் கொண்ட கரியதாகிய பாறையிற் குவித்த சூதாடு கருவிகளை யொப்ப வுதிர்ந்து படுங் கதிர் தெறுகின்ற பக்கமலையிற் றீட்டப் பட்டவை போலத், தேய்ந்த நுனிகளைத் தோற்றுவித்துப் பதித்து வைத்தாலொத்த தலையையுடைய கூரியவாகிய கற்கள் (ஆண்டுப் போக்கு வரவு புரிவார்தம்) கால் விரலின் முனையைக் கெடுக்கும் கல்லொழுங்குபட்ட நிலைமையையுடைய வழிகளைக் கொண்ட (கானம்.) பயனில்லாத காட்டைக் கடக்கவெண்ணு வீராயின், அறவழியன்றெனச (இயற்கைப் புணர்ச்சிக் காலத்து)ச் சொல்லிய பழமை பொருந்திய சொல் அங்கனம் (செயலிற்கு வாராது சொல்லளவே) ஆகுக என்றுணர்த்து மவள்போலத் தன்குறிப்பை முகத்தின் உரைத்துக்காட்டி, ஓவியத்தின்செய்தி போன்று ஒன்றனை(ப்போக்குடம்படாமையை) நினைந்து துணிந்து கண்ணிற் பாவையை மறைத்த நடுக்கத்தைப் புரி கின்ற நீரையுடைய பார்வையோடு, மார்பிலணைத்துக்கொள்ளப் பெற்ற மகனது மெல்லிய தலையிற் சூட்டப்பட்ட தூய தன்மை யுள்ள நீரில் வளர்ந்து இவ்விரண்டு பூக்களாக அமைத்துக் கட்டப்பட்ட செங்கழுநீர் மாலையை முகர்ந்தவளாய்ப் பெரு மூச்சுவிட்ட போழ்து (அம்மாலையின்) அழகிய மலர்கள் பவழம் போலும் நிறத்தையிழந்த அழகற்ற காட்சியைக் கண்டு போக் கொழிந்தேம். அருகிலிருக்கின்றேமாகவும் வருந்துவோளான ஒண்டொடியாள் நாம் அவளைப் பிரிவேமாயின் உயிர்வாழாள் என்பது இப்பாட்டின் பொருள். தலைவன் எஞ்ஞான்றுமில்லாத புதியதொரு முறையில் அளவிலாத் தலையளி செய்கின்றுழித் தலைவி 'இங்கனம் இவர் செய்தலால் அதிர வருவதோர் நோய் எதிரதாயுளது' என்று கருதி வருந்துவாளாதலின், 'அளிநிலை பொறாஅ தமரிய முகத்தள்' என்றார். பின்னர்ப் பிரிதலாகிய துன்பத்தைச் செய்யவிருப்பதனால், முன்னர்ப் பேரின்பத்தைச் செய்தல் தலைவற்கியல்பு. அஃதுணர்ந்த தலைவி எதிர்காலத் துன்பத்தையெண்ணி, அப்போதைய இன்பத்தை மகிழ்வா ளல்லள். அங்கனம் தான் மகிழ்வுறாமையையும், பிரிவச்சமுற் றமையையும் குறிப்பாளாயினள் என்பது 'அளிநிலை பொறாஅது

அமரிய முகத்தள்' என்பதால் நன்கு விளங்கும். மாநிலத்தார்க்கு மழை யின்றிபமையாததாதல் போலத் தலைவிக்குத் தலைவனது தலையளி யின்றியமையாததாகும் என்பதைக் கலித்தொகை உடும் பாட்டில் வரும் "வானந், துளிமாறு பொழுதினிவ் வுலகம் போலுநின், னளிமாறு பொழுதினிவ் வாயிழை கவினே" என்பதால் அறிக. தலைவன் சொல்லாது பிரிய வேண்டித் தலையளி செய்தலை, 'முள்ளுறழ் முளையெயிற் றமிழ் தூறுந் தீநீரைக், கள்ளினு மகிழ்செயும் எனவுரைத்தும் அமையாரென், ஒள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவர், உள்ளுவ தெவன்கொல் அறியேனென்னும்' என்றும், "நுண்ணெழின் மாமைச் சுணங்கணியாகந்தங், கண்ணொடு தொடுத்தென நோக்கியும் அமையாரென், ஒண்ணுத னீவுவர் காதலர் மற்றவர், எண்ணுவ தெவன்கொ லறியேனென்னும்' என்றும் வருங்கலிப்பாட்டி(ச)ன் பகுதியாலு முணரலாம். (தொல். அகத். சூ. சஙு. நச். பார்க்க.)

'பருஅது' என்னும் பாடம் இலக்கண நூலுரையிற் காண்கின்றது. அஃது ஈண்டுப் பொருட் சிறப்புடைத்தன்று. கொள்ளாள் என்றுழிக்கேளாளென்ற பாடமும் பொருந்தும். அகத்து வறிது என மாற்றிக் கொள்க. வாயல் முறுவலள் என்பதே பொருந்துவதாகும். வாயள் என்பது தவறு. 'வாயல் கனவு' (அகம் ௩௯. ௨௩) எனவும், 'வாயல்லா வெண்மை' (கலி. 88) எனவும், 'வாயன் முறுவற்கு' (சிலப். கக. கொலைக்களக்காதை. அடி. அ௰) எனவும் வருதலைக் காண்க. அதனுரையிலடியார்க்கு நல்லார் 'பொய்ந்நகை' என்றே கூறினர். கொளாஅ-கொளுத்தி 'உ௰அ' (அகம். 39) என்பதும் அதனுரையும் ஈண்டுக்காண்க.

ஒண்ணுதல் உயிர்த்த காலை என்றியையும் 'நெல்லிக்காய் வட்டேய்ப்ப உதிர்வன படூஉங் கவாஅன் கதிர்தெறுமிடமாதலையும், வம்பலர் விரனுதி சிதைக்குங் கூர்ங்கல்லதர்க் கானமாதலையுங் குறித்து வழியருமை கூறியவாறுணர்க. 'அறத்தாறன்றெனமொழிந்த தொன்று படுகிளவி'யாவது "நின்னொடுபட்ட தொடர்ச்சியெழுமையும் வருகின்றதொன்றுதலால், இத்தகைய நின்னைப் பிரியேன்; பிரியின் ஆற்றேன், அன்றி அறனல்லது

செய்தேனுமாவேன்" என்று தலைவன், தன் பிரிதற் குறிப் பறிந்து தலைவி கவன்றவிடத்து (இயற்கைப் புணர்ச்சிக் காலத் து)க் கூறிய கூற்றாகும். இதனைத் தொல்காப்பியத்துக் களவி யற்பத்தாஞ்சூத்திரத்துக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதிய வுரையாலறியலாம். தந்நிலையுரைத்தலுந் தெளிவகப் படுத் தலுமாமென்பர் அவ்வுரையாசிரியர். ஈண்டுக் குறுந்தொகை 57, 300, 40, 137ம் பாக்களில் வரும் பகுதிகளாகிய 'மகன்றிற் புணர்ச்சி போலப் பிரிவரிதாகிய தண்டாக் காமமோ டுடனுயிர் போகுகதில்ல.' 'கடல்சூழ் மண்டிலம் பெறினும் விடல்சூழி லன் யான் நின்னுடை நட்பே' 'யானும் நீயும் எவ்வழி யறிதுஞ் செம்புலப் பெய்ந்நீர் போல அன்புடை நெஞ்சந்தாங் கலந் தனவே' 'அரிவை நின் நல்லகம் புலம்ப நிற்றுறந் தமைகுவெனா யின் எற்றுறந் திரவலர் வாரா வைகல் பலவாகுக யான் செல வுறுதகவே' என்பவற்றை யொத்திடுக. நீரின்மை நிலையே பாலை நிலத்திற்குச் சிறப்பு எனச் சிலப்பதிகாரத்துப் பதிக முகவுரையிற் கூறுதலையும், தண்ணீர் பெறாஅத் தடுமாற்றருந் துயரங் கண்ணீர் நனைக்குங் கடுமைய காடு' எனக்கலி கூல் வரு தலையும் நோக்கின் நீரில்லாக்காடு எனலும் பொருந்தும்.

தலைவி நின்று நினைந்த பெற்றிக்கு ஒவச் செய்தியை யுவ மித்தது மகிழற்பாலது. அருகிலிருக்கும் ஞான்று வருந்து மியல்பினள் பிரிந்து தொலைவிற் செல்வேமாயின், சிறிதும் உயிர் வாழ்ந்திருக்க மாட்டாள் என்பது தலைவன் ஆற்றலாற் சொற் றது. இப்பாட்டின் பின்னீரடிகளை "மடவைகாண் நன்னெஞ்சே மாண்பொருண் மாட்டோடப், புடைபெயர் போழ்தத்துமாற் றுள் படர்கூர்ந்து, விம்மியுயிர்க்கும் விளங்கிழையா ளாற்றுமோ, நம்மிற் பிரிந்தவிடத்து" (ஐந்திணையைம்-கூக) "இடைகொண்டு பொருள்வயின் இறத்திநீ எனக்கேட்பின் உடைபு நெஞ்சுக வாங்கே யொளியோடற் பாண்மன்னோ.......................பாயவினறி யாய் நீபுடை பெயர்வாயாயினும் புலம்பு கொண்டினைபவள்" (கலி. 10) என்பவற்றோடொத்திடுக.

(தொடரும்.)

# திருக்குறளுதலிய நெறிமுறை.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை B.A., B.L., தஞ்சாவூர்.

(முற்றொடர்ச்சி துணர் 11. மலர் 4. பக்கம் 155.)

அன்புடையார் எப்போதும் இனிமையைக் கொடுக்கவல்ல இனியசொற்கள் இயம்பும் இயல்புடையராயிருப்பரேயல்லாமல் தமக்கே துன்பத்தினை விளைவிக்கக் கூடிய கடுஞ்சொற்களை மறந்தும் வழங்கார். தன்னகத்தேயுள்ள அன்பினை முகத்தினிடத்தே தோற்றுவித்து அன்பொடு கலந்த இனிய சொற்களை வழங்குதல் ஒருவருக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்தலினும் சாலச் சிறந்தது. மற்றும், அறமானது கொடுத்தலினால் மட்டும் தோன்றி விடுவதன்று; மற்று என்னையெனின்? முகமலர்ந்து இனிது நோக்கி இனிய சொற்கள் வழங்குதலே அறம் என்பதை 'முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானு, மின்சொலினதே அறம்' என்ற செந்தமிழ்க் குறள் விளங்கவைக்கும். இன்சொல்லை யுடையார் நல்லவை நாடி இனிய சொல்லின் எல்லாச் செல்வமும் பெறுவர். மற்றும் துன்புறூஉம் துவ்வாமை அவர்க்கில்லாகும். இன்பமும் புகழும் இன்சொல்லின் பயனாகப் பெறும் பொழுது, வன்சொல், மக்கள் வழங்குதல் யாதுபயன்?

இல்லறத்தாருக்குரிய அறத்தைப் பாதுகாக்கும் மனமுடைய பெரியார் அன்புடையராயிருந்து இனிய சொல்வழங்கின் இயற்கையாகவே தன்னை யாதொரு வகையானும் சார்ந்திடாத மக்களை ஓம்புவர்; ஏனெனில் அன்னவர் பிறவுயிரும் தம்முயிரேபோன்று கருதி பிறர் துன்பங் காணப்பொறாது அத்துன்பத்தினை ஒல்லும் வகையால் நீக்க முயல்வர். தாம் பெற்றபொருளை வறியார்க்கு வழங்கி அவர்தம் துயர்களையவும், நாடிவந்த விருந்தினரை ஓம்பவும் ஒருவன் தன் மனைவி மக்களுடன் இல்லறத்தில் நின்றிருப்பது சாலச் சிறந்தது. பசிப்பிணியால் வருந்தும் வறியார்க்கு உணவளித்தல், தவத்தினும்

பெரிது. பசிப்பிணியினுன் வற்றிக்கிடந்து தவம்செய்யும் ஆற்றலைப் பார்க்கிலும், அப்பசிநோயினைமாற்றி அதனுன் வருந்தும் உயிர்க்கு இன்பம் அளித்தலே இல்லறத்திலிருப்பவனுக்குரிய அறமாகும். இதனை 'ஆற்றுவாராற்றல் பசியாற்றலப்பசியை, மாற்றுவாராற்றலிற்பின்' என்ற குறளால் கண்டு கொள்க. ஒருவன் உண்ணப்படும்பொருள் சாவா மருந்தெனினும் தான் உண்ணப்போகும் அமயத்துத் தன்னை நோக்கி மிகப் பசியுடன் வந்த விருந்தினன் தன் வீட்டின்புறத்தே தங்கியிருந்திடின் அவனுடனன்றி தானுண்டல் வேண்டற்பாற்றன்று என்று 'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா, மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று' என்ற குறளில் தெய்வப் புலவர் கூறியிருப்பது நோக்கத் தக்கது. மற்றும் இல்லறம் வழுவாது இயற்றுபவன் உண்ண உணவின்றி பன்னுள் துன்புற்று உயிர் துறக்கும் நிலைமையிற்கூட ஒரோவழி தன்னின்னுயிரினைக் காப்பாற்றிக்கொள்ள ஓர் தினையளவு உணவு கிடைப்பின், அதனை உண்ணுங் காலத்தும் தான் தனிமையாக யுண்ணலைக் கருதான். பொருளுடையார் பசியால் வருந்துபவரின் துன்பம் தீர்த்து அவர் வயிருகிய பெட்டியில் தம்பொருளையும் சேர்த்துப் பாதுகாத்தல் வேண்டுமென வள்ளுவர் கூறியிருப்பது கருதத் தக்கது. இல்லிருந்து பொருளைக் காப்பாற்றி ஒருவர் விருந்தோம்புதலைக் கைக்கொள்ளாராயின் அவருக்கு நேர்ந்திடும் துன்பங்கள் பலவகையாம். விருந்தோம்புவார் விருந்தோம்புதவினுல் இம்மையிற் பெரும் புகழுடைவர். அவர்தம் கைப்பொருளும் குறையாமல் மேன்மேலும் வளரும். என்னெனில் விருந்தோம்புவாரது விளைநிலம் வித்தின்றி தானே விளைந்திடுமாதலின்,இதனையும்'அகனமர்ந்து செய்யாளுறையுமுகனமர்ந்து, நல்விருந் தோம்புவானில்' என்ற குறள் விளக்கும். இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் பசியினுன் இடர் உழந்தவர்களை விருந்தோம்பிக் காப்பதற் பொருட்டென தெய்வப் புலமைத் திருவள்ளுவர் விளக்கியுள்ளார். ஆனுல் திருவள்ளுவர் விருந்தினர்க்குச் செயத்தகும் உதவி இவையென எங்கும் சுட்டி வரையறுத் துரைத்தாரில்லை. என்னெனில் அதனை

உரைக்கவும் படுமோ? ஆறு பெருக்கற்று அடிசுடும் அந்நாளி லும் அவ் ஆறு ஊற்றுப்பெருக்கால் உலகு ஊட்டல் போன்று, இல்வாழ்வார் தம்மிடத்தே பொருள் சுருங்கிய காலத்தும் தம்மால் இயன்ற அளவு அறம் செய்தல் கடன். இல்லறம் பொருளளவிற்கேற்பச் செயப்படல் வேண்டியதனால், அப் பொருள் சுருங்கினாலும், விருந்தினரை எவ்வாறு மகிழ்வித்தல் தகுதி என்பதை பொய்யில் புலவர் ஆராய்ந்து 'ஒல்லும் வகை யான றவினை யோவாதே, செல்லும் வாயெல்லாஞ் செயல்' எனக் கூறியருளினார். இங்கு 'செல்லும்வாய்,' யென்றதினால் பொருள் மூலமின்றி மன வாக்குக் காயத்தினால் விருந்தினருற்ற துன் பத்தை அகற்றி மகிழ்வித்தலும் செய்யலாமென நாயனார் குண மிகுதியினைப் பாராட்டி யிருக்கின்றனர். இதனான் இல்வாழ் வானுக்குப் பொருள் மிகுதியினைவிடக் குணமிகுதியே வற் புறுத்தப் பட்டதெனப் பெறப்பட்டது.

இவ்வண்ணம் அறம் காக்கும் இல்வாழ்வோர் மனம் வாக்கு காயம் என்ற இம்மூன்றும் தீயவழியிற் புகாது அடக்குத லுடையராயும் நல்லொழுக்கமுடையராயும் வாழ்ந்து வரல் வேண்டும். மனதில் தீயஎண்ணங்களைப் புகுத்திடாது அதைக் காத்திடல்வேண்டும். என்னையெனின் அதனைக் கூறுவாம். எண்ணிறந்த எண்ணக்கள், நம்மை எக்காலும் சாருந் தன்மை யற்ற பொருள்கள்மீது, தோன்றி அவைகளில் ஆசையைப் பெருக்குகின்றன. அவ்வாசை முடிவு பெறுதாயின் தீய எண் ணங்கள், சினங்கொள்ளுதல் முதலியதுன்பங்கள் விளைகின்றன. இத்தகைய தீய எண்ணங்கள் மனதிடத்துத் தோன்றிடாது செய்து அதனான் மெய்யறிவு வாயக்கப்பெற்று ஒருவர் அடக் கத்தினைக் கைக்கொண்டிருப்பாராயின் அவரை அறக்கடவுள் தானே சென்றடைவன் என்று 'கதங்காத்துக் கற்றடங்கலாற்று வான் செவ்வி, யறம்பார்க்கு மாற்றினுழைந்து' என்ற குறளில் பெருநாவலார் நன்கு விளக்கியுள்ளார். மனதிடத்தேதோன்றும் எண்ணங்கள் யாவும் உருவடைந்து வெளிவருவது நாக்கின் மூலமேயாதலான் நாவடக்கம் ஒருவர்க்கு அவசியம் வேண்டப் படுவது இன்றியமையாததென செந்நாப்புலவர் கூறியுள்ளது

உணரத் தக்கது. மனதிற்குத் தோன்றியதை பிறருக்கு எடுத்துக் கூறப்புகுவதின்முன் ஆராய்ச்சி செய்து பயன் தூக்கி யாவருக்கும் துன்பம் விளைவிக்கச்செய்யாது சுருங்கச்சொல்லி உண்மையினை விளங்கச் செயல்வேண்டும். இஃது 'யாகாவாராயினு நாகாக்க காவாக்காற், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு' என்ற குறளால் நன்குணரப்படும். மனதினில் தோன்றும் எண்ணங்களும் நாவாற் வெளிவரும் சொற்களும் குற்றமற்றதாயிருப்பதோடு, ஒருவன் தனது மெய், வாய், கண் மூக்குச் செவியெனும் பொறிகளேயும் அடக்கியாளும் திறமையுடையவனுயிருப்பின் அவ்வடக்கம் அவனுக்கு எழுபிறப்பிலும் நன்மை தருமென்று மாதானுபங்கி, 'ஒருமையுளாமை போலேந்தடக்கலாற்றி, னெழுமையு மேமாப்புடைத்து' என மொழிந்தார். ஐம்பொறிகளே அடக்கலாவதென்னேயெனின் அப்பொறிகளின் வழிகளாய் நுகர்ந்திடும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற இவ்ஐவகையின் வகையறிந்து அவற்றினில் அதிகப் பற்றினேச் செலுத்தாது அடக்கிக் கொள்ளுதலாம். இஃதே அழியாப் புகழையும் பேரின்பத்தையும் தருதலான், யாவரும் ஐம்பொறிகளேத் தம்வயப்படுத்தி அடக்காமல் அழியா நரகத்தையும் இழிவுற்ற இகழ்ச்சியினேயும் இச்சியார்.

தாம் நினேத்தபொழுது தமது ஐம்பொறிகளேயும் அடக்கிக் கொள்ளும் தகுந்த ஆற்றலுடையார் தன்னே யகழ்வாரை வீழாமற்றுங்கும் நிலம் போன்று, தம்மிடத்தே மடமையினுன் இடுக்கண் இயற்றினுரையும் பொறுத்தல் அவரது தலேயாய கடன். மற்றும் பொறுப்ப தோடமையாமல் அறனல்ல செய்யாது அவர்களேக் காப்பதும் தலேயாய அறம். இத்தகைய பொறையுடைமை இவ்வுலகமழியுமளவும் புகழுண்டாக்குமென 'ஒறுத்தார்க்கொரு நாளேயின்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணேயும்புகழ்' என தமிழ் மறை புகல்கின்றது. பொறையுடைமை பகைவரை யழித்திடும் தகுந்த விழுமிய நெறியாகும். ஓர் கீழ் மகன் மடமையனுதல்பற்றி நம்மீது கனன்று இடையூறு செய்திட முயல்வனேல், அத்தகையானிடம் நாம் அன்

பினைக் காட்டி அவனைப் புகழ்ந்தும், அவனாற்றும் இடையூற்றிற்கு இடையூறாக நன்மைபுரிந்தும் வந்திடின் அவ்வறிவிலி ஓரோவழி தன் குற்றமறிந்து பகைமையினை யொழித்து நண்பனாகவும் நண்ணுவன். 'மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந், தகுதியான் வென்று விடல்' என்பது குறள். வல்லமையுள் வல்லமையாவது அறிவிலிகள் செய்திடும் குற்றத்தைப் பொறுத்தலே என்று 'இன்மையுளின்மைவிருந்தொரால் வன்மையுள், வன்மை மடவார்ப்பொறை' எனக் கூறப்படுவதனால் பொறை யுடைமை பொன்னேபோற் போற்றப்படும். இத்தகைய பொறையுடைமை யுள்ளவர்கள் தாம் உண்ணாது நோற்பாராகிய பெரியார் பின்வைத்து மதிக்கப்படுவர்.

இல்வாழ்க்கை யுடையார் தீய எண்ணங்களை அகற்றி நல்லொழுக்க முடையராய் வாழ்தல் அவசியமென முன்னர் கூறப்பட்டுள்ளது. அத் தீயஎண்ணங்களை வெளிப்படுத்தும் தீமைபயப்பனவாகிய தீய சொற்களை அறவே யொழிப்பது இன்றியமையாதது. தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவர், நன்மை பயக்கின்ற சொற்களைச் சொல்லுதலே வாய்மை என்று 'வாய்மையெனப் படுவது யாதெனின் யாதொன்றுந், தீமையிலாத சொலல்' என்றருள் செய்து, தீமை பயக்கின்ற சொற்கள் பயனில்லாச்சொல் எனவும், பொய்ச்சொல் எனவும் இன்னாச்சொல் எனவும் வகுத்துக் கூறுகின்றார். அறம் பொருள் இன்பம் என்ற மூவகை உறுதிகளில் ஒன்றும் பயவாத சொற்களே பயனிற் சொற்களென்றறிக. பல்லார் முனிய இத்தகைய பயனற்ற சொற்களைப் பேசும் இயல்புடையார் மக்களுள் பதரென எண்ணப்படுவர். 'பயனில சொல்லாமை நன்று' என்றும், 'சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க, சொல்லிற் பயனிலாச் சொல்' என்றும் கூறப்படுதலான், வள்ளுவர் பயனில சொல்லாமை என்றதில் கொண்ட உறுதிப்பாடு எத்தகைய உரங்கொண்டதென உணரற்பாற்று. பயனற்ற சொற்களை ஒழிக்கவேண்டுமென்று கூறவந்த தேவர் கேட்டார்க்குத் துன்பம்பயக்கும் சொல்லையும் அறவேவிலக்கவேண்டுமென்றருளினர். இன்சொலாலன்றி இவ்விருநீர் வியனுலகம்

வன்சொலால் என்றும் மகிழாது. 'முகத்தா னமர்ந்தினிது நோக்கியகத்தானு, மின்சொலி னதேயறம்' என்றதினுன் இன் சொல் இயம்புவதே தலையாய அறம். என்னையெனின், இன் சொல்லாகிய அறத்தை வழங்க யாதொரு கைப்பொருளும் வேண்டாவாம். வறியவரும் எளியவரும் எளிதே கையாளக் கூடிய அறம் இஃதே. ஆகவே, சிறுமையுணீங்கிய இன்சொல் இம்மையினும் மறுமையினும் இன்பம் பயக்கும். இத்தகைய நன்மையினைப் பயக்கும் அன்பொடு கலந்த இனிய சொற்களைச் சொல்லாது இன்னுது கூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று என நாயனுர் அருளுகின்றுர். மற்றும் ஒருவர் தமக்கும் ஏனை யவர்க்கும் தீமை பயப்பனவாகிய சொற்களையும் சொல்வதும் தீதெனக்கொண்டு வள்ளுவர் 'தன்னெஞ்சறிவது பொய்யற்க' என வற்புறுத்தினுர். ஏன் அவ்வாறு தேவர் வற்புறுத்திக் கூறினுரெனில் அஃதினையும் அவர் கூற்றுல் நன்கு விளக்குவாம். அஃது 'பொய்த்தபின் தன்னெஞ்சே தன்னைச் சுடுதலான்' என் பதே. தீமையைப் பயக்கின்ற சொற்கள் பொய்ச்சொற்களே. ஆனுல் பொய்மை என்று கூறப்படும் சொற்களும் குற்றமில் லாத நன்மைபயக்குமாயின் அஃது வாய்மையின்பாற் படுமென்று 'பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த, நன்மைபயக்கு மெனின்' என்ற குறள் விளங்கவைக்கும். மற்றும் முதற் பாவலர் இம்மையிற் புகழை விரும்பியவன் வாய்மையினைக் கடைப் பிடித்தொழுகல் வேண்டுமென 'பொய்யாமை யன்னபுகழில்லை யெய்யாமை யெல்லாவறமுந்தரும்' என்ற குறளானும், அவ்வாறு மனமறியப் பொய்பேசாதொழுகுபவர் உலகத்தாரெல்லா ராலும் ஓம்பப்படுவரென்பதை 'உள்ளத்தாற்பொய்யாதொழுகி னுலகத்தா, ருள்ளத்துளெல்லாமுளன்' என்ற குறட்பாவினு னும் விளக்கினுர். தீமை பயக்கும் பொய்ச்சொல்லைக் கூருது நடப்பவர் வேறு அறம் செய்யவேண்டுவதில்லை என்பது மறை மொழி. சான்றேர்க்கு இன்றியமையாத இவ்வாய்மையின்கண் வள்ளுவர் கண்டு கொண்டுள்ள உறுதிப்பாடு பெரிதும் போற் றற்பாலது. உயிர்களைப் பற்றியுள்ள எவ்வகை மாசினையும் கழுவித் தூய்மை செய்தற்கு வாய்மையே தலை சிறந்ததென் றும், அதனின் மிக்கனவாகச் சொல்லப் பட்ட வேறறங்கள்

யாது மில்லென செந்நாப் போதர் 'யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத் தொன்றும், வாய்மையினல்லபிற' எனக் கூறியது வியக்கத் தக்கதே.

அறனின்று இல்வாழ்வான் காணுதவிடத்தே பிறரைப் பழிக்கும் சொல்லால் இகழ்ந்து பேசாதிருத்தல்வேண்டும். புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலினும் உயிர்துறத்தல் நன்றென 'புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற்சாத, லறங்கூறு மாக்கள்தரும்,' என்ற குறளின்கண் மறை நூலார் விளங்க வைத்தார். அறனழீஇ யல்லவை ஒருவன் செய்யினும் அவன் புறனழீஇ பொய்த்து நகைத்தல் தகாது. 'அறங் கூறானல்ல செயினு மொருவன், புறங்கூறானென்றலினிது' என்பது குறளாகும். பிறனது பழியைக் கூறுவோன் தனது பழிகளினுள்ளுந்தான் வருந்தத் தக்கவைகளைத் தெரிந்து கூறுதல் வேண்டுதலான் அப்புறங்கூறுமையை வள்ளுவர் கண்டித்த தன்மை பெரிதும் போற்றற்பாலது. அஃது 'பிறன்பழி கூறுவான் றன் பழியுள்ளுந், திறன்றெரிந்து கூறப்படும்' என்பதே.

உலகமக்கள் இல்லறத்தே நின்று புகழ்பெறப் பொதுவாக ஓம்பக் கூடிய குணங்களை இஞ்ஞான்றும் கூறிப்போந்தோம். இனி அவர்கள் நீக்கவேண்டிய குணங்களையும் செயல்களையும் சிறிது ஆராய்வோம்.

மக்களை நல்வழிப்படுத்தி நன்னெறியில் புகுத்துவது பகுத்தறிவே. மனம் போன போக்கெல்லாம் அம்மனத்தினைப் போகவிடாது தீநெறியை அகற்றி நன்னெறியிற் செலுத்துவதே அறிவாகுமென்று, நான்முகனர் 'சென்றவிடத்தாற் செலவிடாதீ தொரீஇ, நன்றின் பாலுய்ப்பதறிவு' என்றகுறட்பாவில் நன்குணர வைத்தார். அறிவுடையாரெல்லா முடையராதலான், அறிவில்லா மக்கள் இருந்தும் பயனில்லாதலான், இறப்பது நலம். இத்தகைய அறிவு மக்களுக்குச் சிறந்த மனவுணர்வு உண்டாக்கி ஊழான் ஒரு துன்பம் வந்த விடத்தும் அதனான் அல்லலுற்றழுங்காது அவர்களைக் காக்கும் தகைமை வாய்ந்தது. உலகமக்கள் இவ்வறிவு வாய்க்கப்பெறின், மக்கட் பிறவிப்

பயனை இழந்து போகலாகாதென்றும், இப்பிறவியில் நல்வினை செயின், நமக்குப் பின்வரும், பிறவியினில் துன்பமணுகாதென்றும், இங்ஙனமே முற்பிறவியில் இயற்றின தீவினையினுன் இது போது அளவிறந்த துன்பங்களுக் காளாயிருக்கின்றனமென்பதையும் யுணர்ந்து இருவினைப் பயன்களுள் நல்வினைப் பயனாகிய இன்பம் வந்துற்றபோது அகமகிழ்வதுமில்லாமலும் தீவினையின் பயனாகிய துன்பம் வந்துற்றகாலையில் அல்லற் படுவதுமில்லாமல் இன்பதுன்பங்களை ஒரு பெற்றியேயென நோக்கி நடுவுநிலையுடையராய் விளங்குவர். இத்தகைய அறிவு வாய்க்கப்பெருதாயின், மக்கள், பகைவர் பலர் திரண்டு செய்யவொண்ணு இடுக்கண்களைத் தாமே தமக்கு ஆக்கிக்கொள்வர். இதனை 'அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை, செறுவார்க்குஞ் செய்தலரிது' என்ற குறட்பா விளங்க வைத்தல் காண்க. ஒரு பிறவியிற்செய்த நல்வினை தீவினைகளின் பயன் மறுபிறவியில் தவருது நம்மை வலிந்து பற்றுமாதலான் வினைசெய்தார் தம்வினையின் பயனினின்றும் தப்பிப் பிழைப்பதரிது. எனவே தீவினை தீமையினைப் பயப்பதால் அஃது யாவராலும் அஞ்சப்படும். 'தீயவை தீயபயத்தலாற் றீயவை, தீயினுமஞ்சப்படும்' என்பது பொதுமறை. அத்தீவினை, தீவினை செய்தானை விலகாது தொடர்ந்து செல்லும் நிழலைப் போன்றிருக்கும் தகைமை வாய்ந்தது. இதனுனே இத்தீவினையை மனம் மொழி மெய் என்ற மூவகைக் கரணங்களானும் நீக்குதல் வேண்டும். இதற்கு எண்ணங்கள் விளைவதற்கு நிலைக்களமாயிருக்கும் மனத்தை எப்போதும் தூயதாய் வைத்திருத்தல் வேண்டும். மனத்தின்கண் மாசின்மையே அறம். இதனை முதல் பாவலராகிய திருவள்ளுவர் 'மனத்துக்கண் மாசிலனுதலனைத்தற, ஞகுலநீரபிற' என்று விளங்க வைத்தது அறியத்தக்கது. இனி உலக மக்கள் மனத்தின்கண் தூய்மை பெறுதற்கு நீக்கப்படும் குணங்களாகிய அழுக்காறு, வெஃகாமை, வெகுளாமை முதலியன சற்று ஆய்ந்திடுவம்.

பிறர் உடைமைப் பொருள்களில் ஏக்கங்கொண்டுபொருமை கொள்ளுதலே அழுக்காருகும். ஒருவன் தன்னகத்தேமட்டும் அழுக்காற்றினை உடையவனுகி வேறு பகைவர்களில்லா திருந்

தாலும், அவ்வழுக்காறு பகைவர் கொடுத்தற்குரிய இன்னல்களை விட மிக்க கேட்டையும் துன்பத்தையும் தருமென்று 'அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார், வழுக்கியுங் கேடீன் பது,' என்ற குறள் விளக்கும். மற்றும் ஒருவன் யாவரிடத்தும் அழுக்காறுடையனாதலினின்றும் நீங்கப்பெறின் அதனினும் சிறந்த பேறு அவனுக்கு வேறொன்றுமில்லையென அறிவுநூல் 'விழுப்பேற்றினஃதொப்ப தில்லையார் மாட்டு, மழுக்காற்றி னன்மைபெறின்' எனச் சாற்றுகின்றது. அழுக்காறுடையான் கெடுதல் ஒருதலையாதலான் செய்யவளும் அன்னவனை அவ்வித்து தன் தமக்கைக்குக் காண்பித்துவிட்டு நீங்குவான். அழுக்காறு கொண்டு பெருகினவர் இம் மலர் தலையுலகில் யாருமில்லை யாத லான் அவ்விய நெஞ்சத்தானை அவ்வழுக்காறு மறுமையிலே தீயுழியுய்த்து விடுமென்பது நாயனாரது முடிந்த முடிபாகும்.

அருள்வெஃகி இல்லறமாகிய அதன் வழியிலே தங்கினவன் பிறரை வஞ்சித்து அவர் தம் உடைமைப் பொருள்களாகியமண், பெண், பொன் முதலியனவற்றைக் கைப்பற்ற அவாவில்லாத வனாயிருத்தல்வேண்டும். அவ்வாறு கைப்பற்ற எண்ணுவா னாயின் அவன் கெடுதல் ஒருதலையாம். இதனை 'அருள்வெஃகி யாற்றின்கணின்றான் பொருள்வெஃகிப், பொல்லாத சூழக் கெடும்' என்ற குறட்பாவினால் நன்குணரலாகும். பிறன்பொரு ளாகிய இல்லாளை விரும்புவான் ஏதம் பெரிதும் வாய்க்கப் பெறுவான். பகை பாவமச்சம் பழியென நான்கும் அவனை ஒருபோதும் இகவாவாம். அறனியலானில் வாழ்வான் பிறர்தம் உடைமைப்பொருளை வௌவுதற்குரிய அவா தீவினைக்கு வித் தாதலான் அதனை அறவே நீக்கி வாழக்கடவன். பிறர் பொருளைப் பற்றிக்கொள்ளலாமென உள்ளத்தால் நினைத்தலும் தீதென்பது 'உள்ளத்தாலுள்ளலுந் தீதேபிறன்பொருளைக்கள்ளத் தாற்கள்வேமெனல்' என்ற வாயுரைவாழ்த்தால் தெளியப் படும். மற்றும் களவாடப்பட்ட பொருள் பயன் தருவது போன்று நின்று அழிந்துவிடும் தகைமைத்தென்பதை அறவழி நின்றொழுகிய வள்ளுவர் 'களவினாலாகிய வாக்க மளவிறந், தாவதுபோலக்கெடும்' எனக் கூறிய பொய்யாமொழி கூர்ந்து

சிந்தித்துணரற்பாலது. பிறர்பொருள் வேண்டாமையென்னுஞ் செருக்கு விறலினும், அஃதில்லாது அப்பொருளை வெளவுதற்கு விரும்பின் அவ்விருப்பு, அவ்விருப்புடையாரது குடியையும் கெடுத்து குற்றமுமாங்கே தரும். பிறர் பொருளை வெளவு தற்கு ஒருவர் விருப்பமடையா திருப்பின் 'அறனறிந்துவெஃகா வறிவுடையார்ச் சேருந், திறனறிந்தாங்கேதிரு' என்று வள்ளுவர் கூறிய வண்ணம் திருவானவள் தான் சேர்தற்காந் திறத்தை யுன்னி, அப்புலம்வென்ற புன்மையில் காட்சியவரைச்சேர்ந்து நண்ணுவாள்.

(தொடரும்.)

# நயனநூல் நவநீதம்.

தஞ்சை. Dr. S. அமிர்தலிங்கம்பிள்ளை அவர்கள்.

(முற்றொடர்ச்சி துணர் 11. மலர் 5. பக்கம் 184.)

## 1. கண்ணோய் (Sore Eyes).

எந்நாளும் வாராது காற்றுக் காலம்
எடுக்குமே வலிகாணும் இமையும் வீங்கும்
புண்ணாகும் நீர்ப்பீளை உரங் கொட்டாது
புதுமையாய் மூன்றுநாள் போக நோகும்
விண்ணார நோக்க வொட்டாது பட்சமொன்றில்
விதமாகத் திருமிது தானு மென்று
கண்ணோவு குணங்க ளிவைதா னென்று
கருதினார் புவிமீதில் கண்டு தானே

இதன்பொருள் = இந்நோய் எக்காலங்களிலும் வாரது, மேல் காற்றுக்காலங்களில் உண்டாகின்றது. பொதுவாகக் கண்ணில் வரப்பட்ட பிணிக்கு, கண்ணோய் என்று சொல்லப்படுவது போல் இந்நோய்க்கு கண்ணோயென்று ஆன்றோர் பெயரிட்டிருக்

கிறார்கள். அதன் குணங்களோவென்றால் கண்ணில் வலியுண்டாகி இமைகள் வீங்கி கண்கள் புண்ணாகி, நீர் வடிந்து பீளை தள்ளி இரவிலே தூங்கவொட்டாமல், கண்களுக்குள் மணலைப் போட்டிருப்பதுபோல் உறுத்தி, மூன்றுநாள் வரையில் விபரீதமான தொந்தரவைக்கொடுக்கும். இந்நோயின் வயது 15 நாள் 15 நாட்களுக்குப் பிறகுதான் முடிவான நலமேற்படும். இந்நோய் கண்டால் உகைத்தவர் தகுந்த கண் மருத்துவரை யடுத்துப் பரிகாரம் செய்து கொள்ளாமலும் அதை ஏனைய கண் நோய்களுக்கு அடிப்படையானதென்றுணராமலும், நந்தியாவர்த்தப் பூவின்சாறு, முலைப்பால், விளக்கெண்ணெய், குடு கட்டிப்பூண்டின்பால், பழச்சாறு, நல்லெண்ணெய் முதலியவைகளை கண்ணினுட்பெய்தும், நாமக்கட்டி, கருவேலிலை கரிவளையல் முதலியவைகளைப் புறவளையமிட்டும் இவைபோன்ற எண்ணிறந்த முறையற்ற முயற்சிகளைச் செய்து வருகிறார்கள். இவ்வாறு செய்வதால் கண்களிலுள்ள சுவச்சநீர் முதலிய நீர்கள் கெட்டுப்போய் பூவிழுந்தும் பார்வைக்காதாரமான உறுப்புக்கள் கெட்டும்போகின்றன. நூல் ஆராய்ச்சி மிகுந்து அநுபவ முதிர்ச்சியுள்ள பண்டிதரிடம் ஒப்புவித்தால் இவ்வாறுகெடுவதற்கிடமில்லை. நிற்க, இந்நோயை பொதுவகையால் "கண்ணோய்" என்று நினைத்தலும் சரியே. எவ்வாறெனில் அன்னகோபம், பில்லவகை, இரத்தப்படலம் இவைகளும் கண்ணோயைப் போலவே நூற்பழக்கமில்லாதவர்களுக்கு வெளிப்படையாய் காணப்படும். ஆசையால் மாட்சிமை மிக்க இந்திய மக்களாகிய நமக்கு எல்லாவகைக்கும் ஏராளமான அநுபவ முறைகள் முனிவர்களாலேற்படுத்தப்பட்டிருக்கவும் அவைகளைக் கற்றுணர்ந்து கைதேர்ந்தவர்களுமேராளமாயிருக்கவும் நம்மக்கள் துன்பப்படுவது எதனாலேயோ? பாவம்!

## 2. அமரம் (Baby's Sore Eyes).

சிறு குழந்தைகட்கு கண்ணோய் உண்டானல் அமரம் எனப்படும்

**கதிக்கும் இமையில் சதை வளர்ந்து கண்ணும் மூடித்திறவாது**
**பதிக்கும் விழியில் பரந்து குத்தி பலவாய்நீரும் பீளையிடும்**

மதிக்குமெவரை நோக்கரிதாம் மலர்ந்த பூப்போல் சிவந்திருக்கும்
அதிக்கும் குணங்கள் இவைதானும் அமரமென்று அருளினரால்,

இதன்பொருள்—கண்ணிமைகளில் (Upper lids) சதை வளர்ந்து கண்கள் மூடிக்கொள்ளும். கண்விழியில் குத்தலுண்டாகி குழந்தை அழும். பலவிதமான நீர்வடியும்; அதாவது சீழ் போன்ற வெண்மையான நீரும் சில சமயங்களில் இரத்தம் போன்ற செந்நீரும் வடியும்; பீளைகட்டும்; யாரையும் பார்க்க முடியாது; மலர்ந்த மலரைப்போல் சிவந்திருக்கும். இவ்வித குணங்களோடு அமரம் என்னும் நோய் தோன்றும். அதற்குப் பரிகாரம் செய்யாமல் விட்டுவிட்டால் கண்கள் மூடிக் கிடத்தலால் காற்றோட்டமில்லாமல் கண்கள் புழுக்கமடைந்து பூ விழுந்துவிடும். சாத்திரத்திற் கூறிய மருந்தையே கண்ணிலிடவேண்டும். கைப்பாகங்களாய் சிலர் மருந்துகளைப் போடுவதுண்டு. சிலர் இமையைப் புரட்டிக்கொண்டு கையாந்தகரை முதலிய சுணையுள்ள இலைகளால் சதையைத்தேய்த்து இரத்தம் வாங்குவதுண்டு. பழக்கமில்லாதவர்கள் செய்தால் அபாயத்தை விளைவிக்கும். சுணைப்பத்திரங்(இலை)களைக் கொண்டு சதையைத் தேய்ப்பதற்கு "சரவணவிதி" என்று நயன சாத்திரங்கள் கூறும். சுணைப்பத்திரங்களாவன:—கையாந்தகரை, பவளமல்லிகையிலை, பராயிலை, தர்ப்பைப்புல், பூவரசம்பூவின் இதழ் முதலியனவாம்.

### 3. வெண்ணோக்காடு.

கூசுங்கடுக்கும் நீர்முட்டும் குளிர்ந்தசரீரம் எரிவுண்டாம்
மாசுங்கண்ணும் சிறுசிவப்பாம் மதியந்தன்னில் முழிக்காது
தேசுங்குன்றும் நடக்கவொட்டார் தியக்கக்குணங்கள் பலவாகும்
பேசுங்குண வெண்ணோக்காடு பேரிட்டழைப்பார் பெரியோரே.

இதன்பொருள்—கண்கள் கூசும், கடுக்கும், நீர் ததும்பும் உடலில் எரிச்சல் உண்டாகும். கண்கள் சிறுகச் சிவந்திருக்கும், நிலா வெளிச்சத்தில் விழித்துப்பார்க்க இயலாது. கண்களில்

ஒளி குறையும், நடக்க முடியாது; அறிவு அடிக்கடி சலனமுண்டாகும் இவ்வித குணங்கள் இருந்தால் வெண்ணேக்காடு என்று பெரியோர்கள் பேரிட்டழைப்பார்கள்.

அநுபவம்—இந்த நோயானது நோயாளிக்கு மேற்கூறிய துன்பங்களைக் கொடுப்பினும் குளிர்ச்சியான கை பாகங்கள் எத்தனை உண்டோ அவைகளில் எதையேனும் ஒன்றைச் செய்யலாம். கண்களுக்கு சிறிது குளிர்ச்சியை உண்டு பண்ணினல் நோய் நீங்கிவிடும். இந்த நோய்க்கு சில குளிர்ச்சி செய்யும் கைமுறைகளைச்செய்து பழகிய உலகத்தவர், "இந்த பிணியை நாம் நமக்குத் தெரிந்த மருந்தினல் குணப்படுத்தி விட்டோம்; நமக்கு அருமையான கண்மருந்து ஒன்று கிடைத்து விட்டது" என்று, கண்ணிலுண்டாகும் நோய்கெல்லாம் பெரும்பாலும் கண்கள் சிவந்திருத்தல், நீர்வடிதல், கூசுதல், பீளை கட்டுதல் முதலிய பொதுக் குறிகளிருத்தலால் எல்லாம் ஒரே நோய் என்று திரிபுபெற உளத்தில் கொண்டு மருந்திடத் தொடங்கி விடுகிருர்கள். இவர்கள் செய்யும் மருந்தும் மருத்துவமும் வெண்ணேக்காடு ஒன்றுக்கே பொருந்துமாதலால் அஃதல்லாத ஏனைய வியாதிகளுற்றபோது சீர்கெட்டு பலவித உபத்திரவங்களைக் கொடுத்து, கண்ணைக்கெடுத்து, பார்வையும்போய், வருந்தும்படி நேரிடுகிறது. கண் மருத்துவர்களே பிணிகளின் இலட்கணங்களை அறிவார்கள். ஆகையால் அவர்களை அடுத்து அவர்கள் சொற்படி நடக்கவேண்டும்.

### 4. அன்னகோபம்.

கனத்தமேதோர் நயனமுள்ளே கனலழ லெரித்துவிம்மி
உனத்தமாம் விழிபுடைத்து உலையினில் மெழுகுபோல
சினத்தது கண்ணும்நொந்து சிவந்து தானருகிற்றுனல்
அனர்த்தமாம் அன்னகோபம் அறிந்துநீ மருந்துசெய்யே.

இதன்பொருள்—கண்ணுக்குள் எரிச்சலோடு விம்மி, விழி புடைத்து, கண்சிவந்து, உறுத்தலோடிருக்குமானல் அன்னகோபம் எனப்படும். இந்த நோய்க்கு இன்னமருந்திடுவது என்று நீ தெரிந்து பரிகாரம் செய்வாயாக. இல்லையாகில்

மிக்க கெடுதியாய் முடியும். இந்நோய்க்கு கண்ணில் புறவளைய மிட்டு கண்ணினுள் காரமில்லாத மருந்தையிடவேண்டும். கண் புண்ணாக விருக்குமாகில் காரமான மருந்து தாங்காது. துன்ப முண்டாகிவிடும். பண்டிதர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் சிகிச்சை செய்யவேண்டும்.

## 5. பில்லம் (Granulated Eyelids.)

இந்த நோய் நீர்ப்பில்லம் என்றும் சதைப்பில்லம் என்றும் இருவகைத்து.

### நீர்ப்பில்லத்தின் குணம்.

இமையைக்கடுத்து மேல்கனத்து இடுக்கிநீரும் பீளையிடும்
குமையச்சிவந்து வெளுப்புண்டாம் கூசிவிழியும் கீழ்நோக்கும்
சமையத்திரண்டு புருவங்கீழ்ச்சதையும்வளர்ந்து உறுத்துவிக்கும்
நிமையைத்திறக்கில் சதைமூடும் நீ இர்ப்பில்லமெனலாமே.

இதன்பொருள்——இமையில் கடுப்புண்டாகி மேலிதழ் தடித்திருக்கும், கண் இடுங்கியிருக்கும், மிகுதியாக நீர்வடியும், பீளை கட்டும், ஒரு நாள் கண்கள் சிவப்பாயிருக்கும். ஒரு மருந்தும் கண்ணிவிடாமலே ஒரு நாள் தனக்குத் தானே வெளுத்துப் போம். கண்கள் கூசும். பார்வை பூமியைப் பார்த்த வண்ணமாயிருக்கும். மேலிமைக்குள் சதை திரண்டு வளர்ந்து உறுத்தலுண்டாகும். மேலிமையைப் புரட்டிப் பார்த்தால் சதை மூடிக் கிடக்கும். இவ்வகையான குணங்களிருந்தால் நீர்ப்பில்லம் என்று கூறப்படும்.

### சதைப்பில்லம் (Trachoma).

கருகிய இமையினுள்ளே கதித்த துர்மாமிசம்போல்
அருவியே உறுத்திநொந்து அதிகமாய்ச் சிவந்துகூசும்
மருவிய பூவும்தோன்றும் மாருதே பீளைபாயும்
பெருகிய நீருமுண்டாம் பில்லமாமென்று சொல்லே.

இதன்பொருள்—இமையினுட்புறத்தில் தடித்த துர்மாமிசம் வளரும். கண்ணை இமைக்கும் பொழுதெல்லாம் வளர்ந்திருக்குந் துர்மாமிசமானது விழியில் அருவி, உறுத்தி நோவையுண்டாக்கும். கண்கள்சிவந்திருக்கும், கூச்சமுண்டாகும் கருப்பு

விழியில் பூவுண்டாகும்; ஓயாமல் பீளைகட்டும்; ஏராளமான நீர் வடியும்; இப்படியிருந்தாலதற்குப்பில்லமென்று சொல்லுவாயாக. இவை இரண்டல்லாமல் வரட்பில்லமென்று ஒன்றுண்டு. அதன் குணத்தையாவது நோயின் பெயரையாவது நயனவிதி 500ல் கூறவிடினும் யாம் அநுபவத்திற்கண்டதை இங்ஙன் எடுத்துரைப்பாம். ஏனைய குணங்கள் ஒன்றுமேயின்றி, கண்ணிமையின் உட்புறத்தில் சதைமட்டும் வளர்ந்து, அதனால் உறுத்தலுண்டாகி கண்சிவந்திருக்கும். இலகுவில் சதையைக்கரைத்து சீக்கிரத்தில் இந்நோயைப் போக்கலாம். ஸ்ரீநாகமுனிவர் தமது நயனநூல் 200ல் 96 வகைப் பிணிகளையும் நீர், இரத்தம், சதை என்று மூவகையாகப் பிரித்திருக்கின்றார். உதாரணமாக, படலமென்ற நோயை நீர்ப்படலமென்றும், இரத்தப்படலமென்றும், சதைப்படலமென்று முவ்வகைப் படலங்களாகவும், படர்த்தி என்ற பிணியை நீர்ப்படர்த்தி, இரத்தப்படர்த்தி, சதைப் படர்த்தி என்ற முவ்வகைப் படர்த்திகளாகவும், குவை என்ற வியாதியை நீர்க்குவை, இரத்தக்குவை, மாங்கிஷக்குவை என்ற முவ்வகைக் குவைகளாகவும் கூறி இருப்பதுபோலவே பில்லத்தையும், நீர்ப்பில்லம், அமரப்பில்லம் (அமரம் என்பது துர்மாமிசம்) குடற்பில்லம் என்று மூவகையாகப் பிரித்திருக்கின்றார். இவை பொதுவாக கர்மரோகங்களில் ஒன்றாகும். அதற்கு வேண்டிய கர்மசாந்திகளையும், தேவாராதனைகளையும் செய்து மருத்துவம் செய்தால் ஒருவாறு நலத்திற்கு வரலாம். எமது அநுபவத்தில் உலகில் எத்தனையோ வகுப்பினர் இருக்க அருமறையோதிய அந்தணர்கட்கும், அவர்களுள் சிறப்பாய்ப் பெண்பாலருக்கும், துருக்க சாதியருக்கும் இந்நோய் உண்டாகி வாட்டி வருகிறது. காரணம் யாதோ அறிந்திலேம். ஆங்கிலக் கண்வைத்திய நிபுணராகிய மிஸ்டர் எலியட் என்ற ஐரோப்பியரும் இவ்வநுபவத்தை தான் கண்டதாக என் நண்பர் ஒருவரிடம் பேசியதாக யாம் கேள்விப்பட்டு மகிழ்ந்தனம். இதற்கு ஔடதப்பிரயோகமன்றி சஸ்திரப் பிரயோகமும் செய்வதுண்டு. இரத்தப் பில்லமாயிருந்தால் இரத்தக்குழலை ஊசியினால் குத்தி இரத்தத்தை வெளிப்படுத்துவதாகும். ஆங்கிலேய பண்டிதர்களும் இவ்வாறு செய்வதுண்டு. இஃதல்லாமல்

அட்டையை விடுவதுமுண்டு. வைத்தியர்களும், ஏனையோர்களும் இப்பிரயோகத்தை எளிய செயலாகநினைத்து செய்து வருகிறார்கள். அட்டைவிதி என்று ஸ்ரீஅகத்தியனார் தனியாக ஒருநூலை ஏற்படுத்தி இருக்கிறார். அதில் பார்ப்பனர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆய நான்குசாதிகளையும், ஆண் பெண் என்ற பாற்பிரிவையும் கண்டுபிடித்து விலக்கியவற்றை ஒழித்து, கூறியவற்றைகொண்டு இரத்தத்தைப் போக்கவேண்டும். அதிலும் அமுத நிலையையும் கண்டுசெய்தல் வேண்டும். ஆங்கிலரும் அட்டை விடுவதுண்டு. இந்த நோய்க்கு ஔஷத சஸ்திர முறைகள் ஒழிய இன்னும் எத்தனையோ பற்றுகளும், புறவளையமும், வேதுக்களும், நசியங்களும், வர்த்திப் புகைகளும், தைலங்களும் செய்யவேண்டியிருக்க நோய் இன்னதென்று அறியக்கூடாத பாமரர்கள் கண்ணின் நோக்காட்டைப் பார்த்து பொதுவான கண் நோய் என்று நினைத்துத் தமக்கு தோற்றியவற்றையெல்லாம் பிரயோகித்துக் கண்ணை நாசமாக்கி விடுகிறார்கள். இந்த நோய்க்குத் தகுந்த மருத்துவம் செய்பவர் சிலரேயாவர். இந்த நோய்க்குச் சிலபண்டிதர்கள் இமையைப்புரட்டி வைத்துக்கொண்டு துருசுயென்று சொல்லப்பட்ட (Blue Vitriol)ஐக் கொண்டு தேய்த்து விடுவதுண்டு. அப்படி தேய்க்கும்போது நோயாளிக்குக் கண்ணில் எரிச்சல் சகிக்க முடியாததாயிருக்கும். பில்லரோகத்திற்குத் துருசைக் கண்ணிவிட்டாலும் அல்லது துருசு கலந்த மருந்துகளைக் கண்ணிவிட்டாலும் கருவிழியில் பூவிழுந்துவிடும். இந்த நோய்க்குக் கண்ணில் பூவுண்டாதல் இயற்கைக் குணமாயிருக்க அதற்கு மருத்துவம் செய்யப் புகுந்தவர்களும் தாங்களிடும் மருந்தினால் பூவுண்டாகக் காண்பது, குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக் கொள்வதை யொக்குமன்றோ. இஃது இராக்கத சிகிச்சையாகும். இவ்வாறு பண்டிதர் நோயாளி ஆகிய இருவரும் சிரமப்பட்டும் நோய் விலகுவதில்லை.

### 6. படலம் (Pterygium).

1. நாகப்படலம். 2. வெள்ளைப்படலம். 3. இரத்தப் படலம். 4. நீர்ப்படலம் என்று நான்குவகைப் படலங்கள் உண்டு. இவற்றின் குணங்களை முறையே சொல்லுவோம்.

### 1. நாகப்படலம்.

கடைக்கண் இருபுறத்திலும் காணவே சிவப்புத்தோன்றி
துடைசதை போலவந்து சோதியைத் தின்னும் நாளில்
அடைந்திடும் விழிகள் தன்னில் அதிகமாய்ச் சிவந்துகூசும்
நடைபடி குணங்களெல்லாம் நாகமாம் படலமாமே.

இதன்பொருள்—இருகடைக்கண்ணிலும் சிவந்து, அழுத்தமான சதை வளர்ந்து வந்து, வெள்ளை விழி முழுவதையும் கடந்து, கருவிழியிலும் படர்ந்து கருவிழியின் நடுவிலிருக்கிற பாவையையும் நாட்செலச்செல மறைக்கும். கண்களில் நீர் வடியும். அரிப்புண்டாகும். இவ்வளவு குணங்களுமிருக்குமாகில் நாகப்படலமென்று கூறப்படும்.

### 2. வெள்ளைப்படலம்.

கண்ணினில் வெள்ளைதன்னில் கலந்ததோர் பாலினுடை
உண்ணியே விழிக்கும்போது உறுத்திடும் உரைத்துவைத்து
நண்ணிய பளிங்குபோல நலமயிர் புகைந்துகாட்டும்
வெண்ணிய மதிமுகத்தாய் வெள்ளையாம் படலமாமே.

இதன்பொருள்—பாலைக் காய்ச்சித் தோய்த்து வைத்திருந்தால் மேலே உண்டாயிருக்கும் ஆடையைப்போலக் கண்களை மூடித்திறக்கும்போதெல்லாம் உறுத்தும். சிலருக்கு பளிங்கைப்போல் வெண்ணிறமாயும் சிலருக்கு மயிரைப்போல் கறுத்துமிருக்கும். பார்வை புகைச்சலாயிருக்கும். இத்தகைய குணங்களிருக்குமாயின் அதை வெள்ளைப்படலமென்று சொல்லுவாயாக.

### 3. இரத்தப்படலம்.

கருத்திடுங் குழுழுங்காற்றால் கனத்திடும் பீளைபாயும்
எரித்திடுங் கண்களிரண்டும் இரத்தமே வீழ்ந்துகாட்டும்
நெரித்திடும் பிடரிஉச்சி நீங்கிடாக் குத்துக்காணும்
இரத்தமாம் படலமென்ன இயம்பினர் இனிதுமாதோ.

இதன்பொருள்—சரீரம் கருத்திருக்கும், வாயுவினால்சரீரம் கனத்திருக்கும், கண்ணில் பீளைபாயும், கண்கள் எரியும், கண்களில் இரத்தம் இறங்கிச் சிவந்திருக்கும், பிடரி, உச்சந்தலை

இவைகளில் ஓயாத வலியிருக்கும், நாளாக நாளாக இரத்த நிறம் மாறிக் கருஞ் சிவப்பாக இருக்கும், மேற்கூறிய உபத்திரவங்கள் சிறிதேனுமின்றிக் கண்களில் இரத்தநிறம் மட்டும் பொருந்தியிருப்பதுண்டு. இந்தக் குணங்களிருந்தால் இரத்தப் படலமென்று பெயராகும்.

### 4. நீர்ப்படலம்.

சாலவே சிரசில்குத்தித் தாழிமை தடிப்புண்டாகும்
மூலமாம் கருப்புமீதில் முகில்பல மபக்கமுண்டாம்
ஆலவேல் விழியினூளே அருவிநீர் மிகுந்துவீழும்
மூலமாம் முனிவன்கூறும் உண்மைநீர்ப் படலமென்றே.

இதன் பொருள்—சிரசில் வலிஉண்டாகும். கீழிமை தடித்திருக்கும். கருப்புவிழியில் மேகம் படர்ந்தது போலிருக்கும், பார்வை பேதித்துக்காட்டும், கண்ணருவிநீர் ஏராளமாய் வடியும். இத்தகைய குணங்கள் கண்டால் நீர்ப்படலமென்று சொல்லப்படும்.

இவற்றுள் நாகப்படலம் விழியின்மேல் தோன்றும் நோய். இது வெளிப்பிணியென்பது வெளிப்படையாக யாவரும் காணக்கூடியதாயிருக்கும். உள் பிணி என்பது பார்ப்பவர்கட்கு நல்ல கண்ணைப்போல் தோற்றும், நயன பண்டிதர்களுக்கும் நோயாளிக்கும்மட்டும் நோயென்று தெரியக் கூடியதாயிருக்கும். இதற்கு நாகப்படலமென்று பெயர் கொடுத்திருப்பது மிகவும் பொருத்தமானது. எவ்வாறெனில் விழியின்மேல் படர்ந்திருக்கும் சவ்வானது சற்றேறக் குறைய பாம்பைப் போலவே படர்ந்திருப்பதோடு சூரிய சந்திரர்களைக் கிரஹணகாலத்தில் இராகுகேது என்னும் பாம்புகள் மறைப்பதைப்போல் சவ்வானது நாட்பட, பார்வையை மறைத்து வருகின்றது.

(தொடரும்.)

# தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பாராய்ச்சி.

திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், போர்டு உயர்தரக்கலாசாலை, திருவத்திபுரம்.

(முற்றொடர்ச்சி 127-ம் பக்கம்)

தமிழ்ப்பொழிலின் சென்ற மலரில் உயர்திணைப் பாகுபாடு குறித்துவரும், "ஆடூஉவறிசொல்" எனத் தொடங்கும் சூத்திரக் குறிப்புப்பற்றிய ஆராய்ச்சி வெளிவந்தது அன்பர்கள் அறிந்தது. இனி, திணைப்பாகுபாட்டுள் அடங்காத தெய்வத்தையும், உயர்திணைக்குரிய பால்வகையுள் அடங்காத பேடியினையும் குறித்துவரும் சூத்திரக் குறிப்பினை யாராய்கின்றாம்.

4 பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்,
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே;
உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்.

என்பது சூத்திரம். இச்சூத்திரத்திற்கு ஆசிரியர் சேனாவரையர், "உயர்திணை யிடத்துப் பெண்மைத் தன்மை குறித்த ஆண்மை திரிந்த பெயர்ச்சொல்லும், தெய்வத்தைக் குறித்த பெயர்ச்சொல்லும் இவையெனத் தம்பொருளை வேறறியநிற்கும் ஈற்றெழுத்தினைத் தமக்கு உடைய அல்ல; உயர்திணையிடத்துத் தமக்குரிய பாலாய் வேறுபட்டிசைக்கும் என்றவாறு." பால் வேறு பட்டிசைத்தலாவது, தாம் உயர்திணைப் பெயராய் ஆடூஉ வறிசொல் முதலாயினவற்றிற்குரிய ஈற்றெழுத்தே தம்வினைக்கு ஈறாக இசைத்தல், என்று உரை கூறினர். இனிக் குறிப்பு நூலுடைய சாஸ்திரியார், "உயர்திணையில் ஆண்மை திரிந்து பெண்மை சுட்டும் பொருளைக் குறிக்கும் சொல்லிற்கும், தெய்வத்தைக்குறிக்கும் சொல்லிற்கும் தமக்கெனவுரிய ஈற்றெழுத்து இல்லை; ஆதலால் அவை உயர்திணைக்குரிய பாலாய் வேறு பட்டிசைக்கும்," என்று பொருள் கூறினர்.

இவ்விரண்டு உரைகளையும் நோக்குமிடத்து, சேனவரையர் சுட்டிய, திரிந்த என நின்றவற்றைப் பெயரெச்சமாகக்கொண்டு, முறையே, குறித்த என்றும், திரிந்த என்றும் பொருள் கொண்டமை விளங்கும். மேலும், "பெண்மை சுட்டிய என்னும் பெயரெச்சம் பெயர்நிலைக் கிளவியென்னும் பெயர் கொண்டது; ஆண்மை திரிந்த என்பது இடைநிலை," என்றதனுலும் அவர்க்கு இதுவே கருத்தாம். இதனைக் கொள்ளாது "ஆண்மை திரிந்து பெண்மை சுட்டும் பொருளைக் குறிக்கும் சொல்" என்று, சாஸ்திரியார் கூறுவதனுல், ஆண்மை திரிதலும் பெண்மை சுட்டுதலும் ஏதுவும் பயனுமாம் என்பது அவர் கருத்தாதல் விளங்கிற்று. மற்று, சேனவரையர் உரையாசிரியர் கூறியதோன்றனை மறுத்தற்குக் கூறும் ஏதுக்களுள், "ஆண்மை திரிதல் பெண்மையெய்துதற்பொருட்டன்றிப் பேடிக்கு இயல்பாகலின் பெண்மை சுட்டவேண்டி ஆண்மை திரிந்த என்றல்பொருந்தாமையானும்," என்பது ஒன்று. இதன்கண் ஆண்மை திரிதலும் பெண்மை சுட்டுதலும் பேடிக்கு இயல்பே என்பது துணியப்படும். படவே, இவர் கூறும் உரை சேனவரையர் கருத்திற்கு மாறாயிற்று. இனி, உரையாசிரியர் "பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின் என்பதனை மொழி மாற்றி உயர்திணை மருங்கின் பெண்மை சுட்டிய எனக் கொள்க" என்றும், நச்சினர்க்கினியர், "சுட்டிய என்பது, நிலம்பூத்தமரம்(கலி.27.9) என்பதுபோலும் பெயரெச்சம்; அது பெயர்நிலைக் கிளவி என்பதனேடு முடியும்; ஆண்மை திரிந்த என்பது இடைநிலை" என்றும், தெய்வச்சிலையார், "பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின் என்பது பெண்மையைக் குறித்த உயர்திணைப் பெண் பிறப்பினுள் என்றவாறு; ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும் என்பது ஆண்மைத் தன்மையிற் றிரிந்த பெயர்க்கண் நிற்கும் சொல்லும் என்றவாறு" என்றும் கூறினர். இவருள் ஒருவரேனும் ஆண்மை திரிதலும் பெண்மை சுட்டுதலும் இவர்போல ஏதுவும் பயனுமாகக் கொண்டிலர் என்பது இக்காட்டியவாற்ருல் இனிது விளங்கும். விளங்கவே, இவர் கூறும்பொருள் இலக்கண உரையாசிரியன்மார் ஒருவருக்கும் உடன்பாடன்றென்பது துணிவாம். அன்றியும்,

திரிந்த, சுட்டிய என நின்ற பெயரெச்சங்களுக்கு வினையெச்ச வாய்பாட்டாற்பொருள் கூறுதல் நேரிதன்று. ஆகவே, சாஸ்திரியார் கூறியபொருள், பொருள் நெறியாலும், இலக்கண நெறியாலும், பொருந்தாமை காண்க.

இனி, சாஸ்திரியார் குறிப்பின்கண் இவ்விரு பெயர் நிலைக்கிளவிக்கும் "தமக்கெனவுரிய ஈற்றெழுத்து இல்லை; ஆதலால் அவை உயர்திணைக்குரியபாலாய் வேறுபட்டிசைக்கும்" என்றதை நோக்குவார்க்கு உரிய ஈற்றெழுத்து இன்மை இவை உயர்திணை மருங்கிற் பால்பிரிந்திசைத்தற்கு ஏதுவாதல் தோன்றும். அவ்வேது நிரம்பாதென்பது ஒருகால் நோக்குவார்க்கும் இனிது புலனாதலாலும், ஆசிரியர்க்கு அது கருத்தாயின் ஏதுப்பொருண்மை தோன்றச் சூத்திரிப்பராதலாலும் உணர்ந்துகொள்க.

இனி, பெயர்நிலைக்கிளவி என்பதன் பொருளை ஆராயத்தொடங்கிய சாஸ்திரியார், "இளம்பூரணத்திலும் நச்சினார்க்கினியத்திலும் **பெயர்நிலைக் கிளவி** என்பதற்குப் பெயர்ப்பொருள் என்று பொருளுரைக்கப்பட்டது. அங்ஙனமாயின் **அந்தம் தமக்கிலவே** என்பது எவ்வாறு பெயர்நிலைக் கிளவியோடு இயையும்? பொருளுக்கு அந்தம் ஏது? சொல்லுக்குத் தான் இவ்வென அறியும் அந்தம் உண்டு; ஆதலின் அவ்வுரைபொருந்துமாறில்லை. சேனாவரையரோ "பெண்மை சுட்டிய...........பெயர் நிலைக்கிளவி' என்பதில், பெயர்நிலைக்கிளவி என்பதற்குப் பெயர்ச்சொல் என்று பொருள் கொண்டு 'பெண்மைத் தன்மை குறித்த ஆண்மை திரிந்த பெயர்ச் சொல்லும்' என்று உரைத்தனர். ஆனால், பெயர்ச்சொல், பொருளின் தன்மையாகிய பெண்மைத் தன்மையை எவ்வாறு குறிக்கும், என்ற ஐயத்தை மனத்திற்கொண்டு, 'தன்மை திரிபெயர் என்றாற்போலச் சொல்லொடு பொருட் கொற்றுமை கருதி ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி என்றார்' என்றனர். இளம்பூரணத்தில் பெயர்நிலைக் கிளவி என்பதற்குப் பிறனொருவன் கூற்றாகப் 'பெயர் என்பதனை ஆகு பெயராற் பொருளாக்கி, பொருள்மேல் நிலைபெற்றகிளவி'

என்று பொருள் கூறப்பட்டுளது. தெய்வச்சிலையார் பெயர் நிலைக்கிளவி என்பதற்குப் 'பெயர்க்கண் நிற்குஞ்சொல்' என்று பொருள்கூறுகின்றனர். இப்பொருள் மிகப்பொருத்தமானது," என்று கூறுகின்றார்.

இக்கூற்று ஆராயுமிடத்து இனிது விளங்குதற்பொருட்டு இருபகுதியாகப் பகுத்துக் கொள்வாம். முதலாவது, பெயர் நிலைக்கிளவி என்பதற்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறியபொருள் பொருந்தாதென்பது; இரண்டாவது பகுதி, சேனாவரையர் கூறியதும், இளம்பூரணத்துப் பிறனொருவன் கூற்றாகக் காணப்படுவதும், தெய்வச்சிலையார் கூறியதும் காட்டி, தெய்வச்சிலையார் கூறியபொருள் மிகப் பொருத்தமானது என்பது.

முதற்பகுதியின் மேற்கோள் பெயர்நிலைக்கிளவி என்ப தற்குப் பெயர்ப்பொருள் என்று பொருள் கூறியது பொருந் தாது என்பது; இதற்கு ஏது, அந்தம் தமக்கிலவே என்பது. பெயர்நிலைக்கிளவி என்பதனோடு இயையாது என்பதும், இவ் வென அறியும் அந்தம் சொல்லுக்குத்தான் உண்டேயன்றிப் பொருளுக்கு இல்லை என்பதும் ஆகும். "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே" என்ற சூத்திரத்தால், பொருள், உயர்திணைப் பொருள் அஃறிணைப்பொருள் என இரண்டாதலும், அவ்விரு பொருளையும் இசைக்கும்சொல் அம்முறையே இரண்டாதலையும் கூறி, அச்சொற்கள் பால்பிரிந் திசைக்கும் இயல்பினை, "ஆடூஉ வறிசொல்" என்றும், "ஒன்றறி சொல்லே" என்றும் வரும் சூத்திரங்களால் காட்டிய ஆசிரியர், இருதிணைக்கண்ணும் அடங் காது நிற்கும் தெய்வப்பொருளையும், உயர்திணைப் பாற்பாகு பாட்டிலடங்காத பேடியையும் குறிக்குஞ் சொற்கள் பால் பிரிந் திசைக்கும் இயல்பினை இச்சூத்திரத்துட் கூறினாரென்பது அவர்கள் கருத்தாதல் அவர்கள் உரைகளால் விளங்குவதனால், பெயர்நிலைக்கிளவி என்பதற்குப் பெயர்ப்பொருள் என்று கூறு வாராயினர். "ஆயிருதிணையின் இசைக்குமன் சொல்லே" என்றதனால், எய்திய சொல்லினது இசைப்பியல்பு ஈண்டு விலக் கப்படாமையின் இவ்விருபொருளையும் இசைக்கும்சொல் அந்தம்

தமக்கில என்பதும் அவர் கருத்தாம். "உயர்திணை என்மனார்" என்ற சூத்திரத்துள் சொல்லிசைத்தற்குரியபொருளை முற்கூறியதுபோல ஈண்டும் பொருளே முற்கூறப்பட்டது. இங்ஙனம் கூறியதற்குப் பயன் சொல் இசைத்தற்குரியன அவ்விருதிணைப் பொருளுமேயன்றி, அவற்றுள் அடங்காது நிற்கும் இதனையும் சொல் இசைக்கும் என்பது எய்துவித்தல். இக்கருத்துக்கள் அவர் தம் உரைகளுள் விளங்கி நில்லாமையின் சாஸ்திரியாரது குறிப்பு உண்மையாராய்ச்சிக்கண் நுழையாதாயிற்று.

இரண்டாவது பகுதியின் மேற்கோள் தெய்வச்சிலையார் கூறியதே மிகப் பொருத்தமானது என்பது. பொருளின் புடைபெயர்ச்சி புணர்த்துவதனை வினை என்றும், பொருளைபுணர்த்துவதைப் பெயர் என்றும் கூறுபவாகலின், பெயர் என்றது பொருளை எனக்கொண்டு* அப்பொருட்கண் நின்றிசைக்கும் கிளவி பெயர்ச்சொல்லாதல்பற்றி, பெயர்நிலைக்கிளவி என்பதற்குச் சேனாவரையர் சுருங்கிய வாய்பாட்டாற் பெயர்ச்சொல் என்றும், பொருட்குரிய இயல்பினைச் சொல்மேலேற்றியுரைத்தற்கு, "சொல்லொடு பொருட்கொற்றுமை கருதி ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவியென்றார்," என்றும் கூறினர். இந்நெறியறியாது சாஸ்திரியார், "ஆனால், பெயர்ச்சொல் பொருளின் தன்மையாகிய பெண்மைத் தன்மையை எவ்வாறு குறிக்கும் என்ற ஐயத்தை மனத்திற்கொண்டு, "தன்மைதிரிபெயர்" என்றாற்போலச் சொல்லொடு பொருட் கொற்றுமை கருதி ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி யென்றார்" என்றனர். பெயர்நிலைக்கிளவி என்பதற்குப் பெயர்க்கண்நிற்கும் சொல் என்பது தெய்வச்சிலையார் கூறியபொருள். இதனால் பெயர் என்பது பெயர்ப் பொருட்காகி அதன்மேல் நிற்கும் சொல்லாகிய பெயர்ச்சொல் என்பது பட்டுச் சுற்றிப்போயும் சுங்கச்

---

* "வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்" (சொல். சூ. 11) என்ற சூத்திரத்துப் "பெயரிற் றோன்றும்" என்புழி, "பெயர் என்றது பொருளை" என்பர் சேனாவரையர். அத்தொடர்க்கு அவ்விடத்துச் சாஸ்திரியார் பொருந்தாப் பொருளொன்று கூறுவர். அதனைக் கொள்ளற்க.

சாவடியில் வந்து நின்றதுபோல சேனவரையர் கூறியபொருளே யாதலின் தெய்வச்சிலையார் கூறியபொருள் "மிகப் பொருத்த மானது" என்று சாஸ்திரியார் கூறியது சாலாமை யறிக. இளம் பூரணத்தில் பெயர் நிலைக்கிளவி என்பதற்கு பிறனொருவன் கூற்ருகப் பொருள்மேல் நிற்கும் கிளவி என்று கூறியிருப்பதும் வேறுபடாமையறிக.

இனி, இச்சூத்திரத்திற்கு உரையாசிரியன்மார் காட்டிய உதாரணங்களுள் "பேடி வந்தான்" என்பது இளம்பூரணத்தில் ஈண்டேயன்றி, "ஆண்மை திரிந்தபெயர் நிலைக்கிளவி" (சொல். 12) என்ற சூத்திரத்தும் காட்டப்பட்டிருத்தற்குக் காரணம் தெரியவில்லையென்று சாஸ்திரியார் கூறுகின்றூர். "ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி" என்றவிடத்து, "ஆகிடனின்றே" என்பதனல் சிறுபான்மை பேடிவந்தான் என ஆண்பாற்கும் ஏற்கும் என்றும், "இச்சூத்திரம் என்நுதலிற்றே எனின் எய்தி யது விலக்குதல் நுதலிற்று" என்றும் இளம்பூரணர் கூறியிருத்த லால் ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியாகிய பேடி என்பது, வந்தான் என ஆண்மையறிசொற்கும் ஆம் என்பது கருத்தாதல் விளங்கிற்று.

சேனவரையர், "பெண்மை சுட்டிய எனவே பெண்மை சுட்டாப் பேடென்பதும் ஒழிக்கப்பட்டதாம்," என்றதனல் பெண்மை சுட்டாது ஆண்மைமட்டில் திரிந்தபெயர் உண்டென் பதும், பெண்மை சுட்டாவிடினும் ஆண்மை திரிந்தமையின் ஆண்மை யறிசொற்கு ஆகிடனின்று என்றற்கு "ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி" (12) என்றே கூறியொழிந்தார் என்பதும் கருத்தாதல் பெறப்படுதலின், பேடிவந்தான் என்பது போலும் உதாரணம் சேனவரையர் தந்திலர் என்றே கோடல் வேண்டும். மற்றும், "பின்னர் அவர் பேடர் வந்தார் என்று உதாரணம் கொடுத்ததால் பேடன் வந்தான் என்று உதாரணம் கொடுத்திருத்தல்வேண்டும்" என்று சாஸ்திரியார் கூறுகின்றூர். பேடர் என்பது பேடன் என்பதன் பன்மை வாய்பாடே என வரைந்து கூறலாகாமையாலும், பேடிஎன்பதற்கு அன்னதாதல்

நீக்கப்படாமையாலும், பேடர் வந்தார் என்றது கொண்டு பேடன் வந்தான் என்று கூறியிருத்தல்வேண்டும் என்பது பொருந்தாது.

"பெண்மை திரிதலும் உண்டேனும் ஆண்மை திரிதல் பெரும்பான்மையாகலான், ஆண்மைதிரிந்த என்றார்" என்று (சேனாவரையர்) சொல்லுமிடத்து உபலக்ஷணத்தால் பேடன் என்பதற்குப் பலர்பாலாகப் பேடர் என்பது உதாரணமாகக் கொள்ளலாம் என்று அவ்விடத்துக் காட்டியிருப்பின் பொருந்தும் என்கின்றார். பெரும்பான்மைபற்றி ஆண்மைதிரிந்த என்றமையின் சிறுபான்மை பெண்மை திரிந்த பெயர் உண்டென்பதும், அஃது ஆண்மை யறிசொற்கு ஆகுமிடமுடைமையும் சேனாவரையர்க்கு உடன்பாடென்பது அவருரையால் விளங்கும். ஆயினும் ஆசிரியர், "ஆண்மை திரிந்த" என்றும், "பெண்மை சுட்டிய" என்றும் எடுத்த மொழியாற் கூறியதனால் அதற்கேற்ப உதாரணம் தருதலே நேரிதாம். ஆகவே எவ்வழியும் பெண்மை திரிந்த பெயராகிய பேடன் என்பதனை உதாரணமாகக் காட்டல் சேனாவரையர்க்குக் கருத்தன்றென்பதனைத்தெற்றென உணர்க. பெண்மை திரிந்த பெயர் ஆண்மை யறிசொற்கு ஆகிடன் உண்டு என்பதுகொண்டு ஈண்டு உதாரணம் காட்டி யமைத்தல் உரையாசிரியர்க்கும் கருத்தன்மை அவர் உரையால் உணர்க.

இனி, உரையாசிரியர் கூறிய, "சிறுபான்மை பேடிவந்தான் எனவும் ஆண்பாற்கும் ஏற்கும்," என்பதற்குச் சிறுபான்மைத்தாகிய பெண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி என்பது கருத்தாயின், அது சேனாவரையர்க்கும் உடன்பாடாமேயன்றி, ஆண்மை திரிந்தபெயர் ஆண்மையறிசொல் கொண்டது என்பது கருத்தே யன்று என்பது தெளிவாம்.

# உரையாசிரியர் ஒருவர், பேராசிரியர் பலர்.

திரு. E. R. நரசிம்ம அய்யங்கார் அவர்கள்,
வக்கீல், சேலம்.

தொல்காப்பியமென்னும் இலக்கணத்தின் தொன்மையும் பெருமையும் அதன் பெயரானே விளங்கும். இந்நூல் எழுத்து சொல், பொருள் என மூன்று பால்களாக வகுக்கப்பட்டுளது. தொல்காப்பியவாசிரியர் தமது காலத்துத் தமிழ் மக்களின் பழக்க வழக்க வொழுக்கங்களையொட்டி நூல்யாத்தனர், பழக்க வழக்கங்கள் காலத்தால் மாறுபடுவது இயற்கையாதலின், அவ் வக்காலத்துக் கேற்றவாறு நூல்கள் புதிய முறையில் தோன்று வதும் இயற்கையாகும். தொல்காப்பியத்தின் பொருட்பாலை விரித்துக்கூறும் நூல்கள் முதன்முதல் தோன்றின. காக்கை பாடினியம், சிறுகாக்கை பாடினியம் போன்ற யாப்பு நூல் களும், இறையனுர் களவியல், பன்னிரு படலம் போன்ற அகப் பொருள் புறம்பொருள் நூல்களும், அணியியல் இந்திரகாளியம் போன்ற அலங்காரம், பாட்டியல் நூல்களும் முதலியன பொரு ளதிகாரத்தை விரித்துக் கூறும். இதன் பின்னர் எழுத்தையும் சொல்லையும் விரித்துக் கூறும் பரிமாணம், அவிநயம் போன்ற நூல்களும் தோன்றின. இந்நூல்களைத் தழுவி புறப்பொருள் வெண்பா, யாப்பருங்கலம், காரிகை, செய்யுளியல், பாட்டியன் மரபு, கோவை நூல்போன்ற எண்ணிறந்த நூல்கள் தோன்றி எஞ்சியுள்ளன போக மற்றவை யழிந்தன.

இந்நூல்கள் நிலவியிருந்த காலத்துத் தொல்காப்பியம் ஒளி மழுங்கி சீர் நிலை குலைந்ததெனலாம். தொல்காப்பிய நூலைப் பாராட்டுவோரும் பயில்வோரும் சிலரானர். இச்சிலர் செய் திருந்த வுரைகளை அரிதிற்றேடி முயன்று இளம்பூரணவடிகள் தொல்காப்பியமென்னும் பாரிரும் பௌவத்திலாழ்ந்து கிடக்கும் செம்பொருள்களைத் திரட்டித் தெள்ளமுதாகத் தாமோருரை செந்தமிழோரின்புற அளித்ததன் பயனாக உரையாசிரியரென் னும் உலைவிலாப் புகழுடம்பு பெற்றனர்.

இளம்பூரணவடிகளைப் பின்பற்றி தெய்வச்சிலையார், கல்லாடர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், முதலிய புலவர் பெருமக்களும் சீர் குறைந்திருந்த தொன்னூலை மீண்டும் தொல் புகழ் எய்துதற்காக, உரையியற்றினர். புலமை சான்ற இவ்வுரையாசிரியர்கள் தமது பரந்த பல்கலை யுணர்வைக் கருவியாகக்கொண்டு இறந்த காலத்துப் பழக்க வழக்கங்களையறிந்து உரையியற்றிய பெருமையை சிற்றறிவினோர் அறியுந் திறத்த தன்று. இவ்வுரைகளில் ஒன்றற்கொன்று முரணாகத்தோன்றும் பகுதிகள் பலவுள. இக்குறைபாட்டை நீக்கும்பொருட்டு பல்கலையுணர்ந்த திருவாளர் சுப்பிரமணிய சாஸ்திரிபாரவர்கள், "தொல்காப்பிய வாராய்ச்சிக் குறிப்புரை" என்னும் கட்டுரை யொன்று "செந்தமிழ்" வாயிலாக வெளியிட்டனர். அறிஞரனைவராலும் இவ்வாராய்ச்சிக் குறிப்புரை பாராட்டத்தக்கது.

இக்குறிப்புரைக்கு மறுப்பாகப் பலகட்டுரைகள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன. தமிழ்ப்பொழிலில் திருவாளர். சோமசுந்தரம் பிள்ளையவர்களும் ஓர் மறுப்புக் கட்டுரை வரைந்து தமது நுண்மாண் புலமையை வெளியிட்டு வருகின்றனர். இம் மறுப்புக் கட்டுரையன்றி தமிழ்ப்பொழில் தொகுதி 5-ல் தெய்வச்சிலையார் சொல்லதிகாரவுரையை இப்புலவர் செவ்வனே யாராய்ந்து மற்றொரு கட்டுரையும் அளித்துள்ளார். இவ்விரண்டு கட்டுரைகளில், இளம்பூரணவடிகள், தெய்வச்சிலையார், கல்லாடர், பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்கள் திகழ்ந்தகாலங்களை முறைப்படுத்தி ஒருவர் பின்னொருவர் தோன்றியதாக திரு. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் கூறிய வாராய்ச்சித் திறன் போற்றத்தக்கது.

உரையாசிரியர்கள் திகழ்ந்த காலங்களை வரையறைசெய்து இவ்வாசிரியர் தமது துணிபு கூறியிருப்பாராயின் ஆராய்ச்சி இன்னும் அதிகச் சிறப்புறும். இம்முறைப் படுத்திக் கூறுவதற்கு திருக்கோவையுரையும் அடியார்க்கு நல்லாருரையும் துணைக் கருவிகளாகக் கையாண்டு உரையாசிரியர் இருவரென்றும், தொல்காப்பியப் பேராசிரியரும் திருக்கோவை யுரையாசிரியரும் ஒருவராயிருத்தல் வேண்டுமென்றும் கூறியிருப்பது

பொருந்தாவுரை என்பதற்குச் சிலவேதுக்களை ஈண்டெடுத்துக் கூற முயலுவேன். நேமிநாத நூலையும் அதன் உரையையும் உடனாராய்ந் திருப்பாராயின் இம்முடிபுகள் கூறியிரார் எனக் கூறலாகும். ஆகவே நேமிநாதநூலை இங்கு ஆராய்வது அவசிய மாகும்.

நேமிநாதம் என்னும் இலக்கண நூலின் ஆசிரியர் குணவீர பண்டிதராவார். இவ்வாசிரியர் திரிபுவனதேவன் என்னும் முதற்குலோத்துங்கசோழன் காலத்தில் வச்சணந்திமாலை யெனவும் வெண்பாப் பாட்டியல் எனவும் பெயர்பெறும் ஓர்நூலை இயற்றியுள்ளார் என்பது அதன் பாயிரத்தால் உணரலாகும். நேமிநாதம் என்னும் நூலையும் அக்காலத்திலேயே இரண்டாவ தாக இயற்றினர் போலும். தமிழ் நாவலர் சரிதையில் 129-ம் செய்யுளில் அகளங்கன் புகழப்படுகிறான். அதன் தலைப்பில் "உலாப் பாடியபோது பேராசிரியர் நேமிநாதர் பட்டோலை பிடிக்கப் பாடியது" என ஆசிரியர் பெயர் வந்துளது. அகளங் கன் என்னும் சிறப்புப் பெயரை விக்ரபசோழன் பூண்டிருந்தா னதலின் குணவீரபண்டிதர் விக்ரசோழன் காலத்திலு மிகுந்தவ ராவர். சங்க காலத்து வழக்குப் போல, நேமிநாதம் இயற்றிய பின் இப்பண்டிதருக்குத் தமது நூலின் பெயரே சிறப்புப் பெய ராய் விளங்கிற்று போலும். இவர் பேராசிரியரென்னும் பெய ரும் பெற்றிருந்தார் போலும். எனவே நேமிநாதம் 11-ம் நூற் றூண்டிறுதியிலாவது 12-ம் நூற்றூண்டின் முதலிலாவது இயற் றப்பட்டதாகும்.

நூலின் பெருமை. இந்நூல் சின்னூல் என்னும் பெருமை பெற்று விளங்கியதென்பது, "சின்மையை சின்னூல் என்றது போல" எனப் பதிற்றுப் பத்துச்செய்யுள் 76, உரையாலும், "சின்னூலுரைத்த குணவீர பண்டிதன் சேர்பதியும்" எனப் படிக்காசுப்புலவர் தொண்டைமண்டல சதகச் செய்யுளில் கூறிய வாக்காலும் நன்கு விளங்கும். இந்நூல் தொல்காப்பிய நூலைச் சுருக்கமாகக் கூறுவதால் மாணவர் பயில்வதற்கேற்றது என்பதும் புலனாகும். இளம்பூரணவடிகள் உரையைப் பெரும்

பான்மையும் தழுவியே ஆசிரியர் நூல்யாத்தனர். வடமொழிப் பதங்கள் புணரும் வகையைக் குறித்து ஆசிரியர் சூத்திரம் உரைத்திருப்பதை நன்னூலாசிரியரும் பின்பற்றினர்போலும். இந்நூலின் சொற்றொடர்களும் நன்னூலில் காணப்படுகின்றன. வினைமுற்றிலக்கணத்தை வினையியலில் இவ்வாசிரியர் கூறியிருப்பதை நோக்கியே தெய்வச்சிலையாரும் இவரைப் பின்பற்றி வினையியலில் கூறினர்போலும். சேனாவரையர், விளிவேற்றுமை எதிர்முக மாக்குதற் பொருட்டாதல் பெயரானே விளங்குமாதலிற் கூறாராயினார்'' என்று விளிமரபு சூ. 1 உரையில் கூறியது இரண்டற்று மூவகைப்பேர் முன்னிலைக்கணென்றுந் திரண்டுவிளி யேற்குந் திறம்'' என்று இந்நூலில் கூறிய கருத்தைச் சுட்டியதாகும். செப்பு அறுவகைத் தாகுமென இளம்பூரணவடிகள் கூறினர். அறுவகைச்செப்பும் நான்குவகையாக அடங்குமென்றும், உடன்படுதலும் மறுத்தலும் என இரண்டு வகையாகவும் அடங்குமென்றும் இவ்வாசிரியர் கூறியுள்ளார். இக்கருத்தையே சேனாவரையர் பின்பற்றினர் போலும். செய்யாவென்னும் வினையெச்ச வாய்பாடு கூறிய பெருமையையும், ஏகாரம் எதிர்மறைப் பொருளில் வருமென்ற பெருமையையும் திரு. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் தெய்வச்சிலையார்க்குரிமையாக்கினர். அப்பெருமைகள் இவ்வாசிரியருக்கே ஏற்புடையனவாகும். இங்குக் கூறியவாற்றால் இவ்வாசிரியர் பேராசிரியர் எனப்பட்டார் என்பதற்கும் காரணம் விளங்குதல் காண்க.

தொல்காப்பிய நூலையன்றி இவ்வாசிரியர் பிற நூலையும் பின் பற்றினர் என்பது,

"செய்புமெனும் பெயரெச்சத் தீற்றின்மிசைச் சில்லுகர
மெய்யொடும்போ மொற்றொடும்போம் வேறு'' எனச்

சொல். சூ. 62-ல் கூறியிருப்பதால் உணரலாகும். இப்புதிய கருத்து எந்நூலில் உள்ளதென உரையாசிரியர் கூறாராயினும் தக்கயாகப் பரணி 16ம் தாழிசையுரையில் "தேவராயவர்'' என்னுந்தொடரை "தேவர், ஆயும், அவர்'' எனப் பதம் பிரித்துக்காட்டி, "செய்யுமென்னும் பெயரெச்சத்தின் உகரமும் மகர

வொற்றும் கெட்டனவென வுணர்க; இது வயிரமேக விருத்தியுள் விளங்கும்" என்று கூறப்பட்டுளது காண்க. இவ்விருத்தி நூலும் நேமிநாத நூலுக்கு முற்பட்டதாகுமென ஊகிக்க விடமுண்டு. தந்திவர்ம பல்லவ மன்னன் வயிரமேகன் என்னும் பட்டம் பூண்டிருந்தானென்பது சாசனங்களாலும், "வயிர மேகன்றன் வலிசூழ்ந்தழகாயகச்சி" என்ற திருமங்கை மன்னன் திருவாக்காலும் அறியலாம். இவ் விருத்திநூல் அம்மன்னன் காலத்தியற்றப்பட்டு அம்மன்னன்பட்டம் பூண்டது போலும். நேமிநாத உரையாசிரியர் பெயர் அறியக்கூடவில்லை. இப்புலவர் உரையிபற்றிய காலத்தை அகச்சான்று விளக்கும். எழுத்தியல் 10, 11 சூத்திரங்களின் உரையில் குலோத்துங்கன், அபயன், அகளங்கன், அநுபமன் என்னும் பெயர்கள் உதாரணங்களாகக் காட்டப்பட்டுள்ளன. அபயன் என்னும் சிறப்புப் பெயரை முதற்குலோத்துங்கன் (கி. பி. 1080—1118) வகித்திருந்தான். விக்ரமசோழன் (கி. பி. 1118—1135) அகளங்கன் என்னும் பட்டத்தால் விளங்குவான். அநுபமன் என்னும் சிறப்பைப் பூண்டவன் இரண்டாம் குலோத்துங்கனுவன். அநுபமன் என்னும் வடமொழிப் பதத்திற்கு எதிரிலாதவன், நிகரிலாதவன் என்று பொருள் கூறுவர். கவிச்சக்கரவர்த்திகள் ஒட்டக்கூத்தர் இரண்டாம் குலோத்துங்கன் புகழையெடுத்துப் பாடிய "குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்," வாரானைப் பருவத்தின் ஒவ்வொரு செய்யுளின் இறுதியடியிலும் எதிரிலாப் பெருமாள் எனக் கூறியிருப்பதைக் காண்க. கங்க நாட்டின் கீழைப் பகுதியும், நடுநாடும் இரண்டும் சேர்ந்து நிகரிலி சோழமண்டலம் என்னும் பெயரால் வழங்கப்பட்டன என்பது சாசனங்களிற் காணலாகும். எனவே நேமிநாத வுரையாசிரியர் 2ம் குலோத்துங்கன் (கி. பி. 1136—1146) காலத்திலிருந்தவராவர். இவர் காலத்தை அறுதியிட்டுக் கூற இவ்வுரையில் மேற்கோளாக,

"புனையுறு செய்யுட் பொருளை யொருவழி
வினைநின்று விளக்கினது விளக்கெனப்படுமே"

"முதலிடை கடையென மூவகையான" எனவரும் அணியியலின் சூத்திரங்கள் பயன்படுகின்றன.

தண்டியாசிரியர் இயற்றியுள்ள அலங்கார நூலை அடியார்க்கு நல்லார் மேற்கோளாகக் கொண்டவிடங்களில் அணியியலிற் காண்கவென்றூர். அவர் காட்டிய சூத்திரங்கள் தண்டியலங்காரச் சூத்திரங்களாகும். ஆகவே தண்டியார் தமது நூலுக்கு அணியியல் என்னும் நாமத்தைச் சூட்டினராதல் வேண்டும். பேராசிரியரும் இக்காலத்தார் அணியியல் என்று நூலியற்றினர். என்றுகூறியிருப்பதால் தண்டியலங்காரம் அணியியலென வழங்கப்பட்டதெனத் தெரிகிறது. நேமிநாதவுரையாசிரியர் காட்டிய சூத்திரங்கள் தண்டியலங்காரத்தில் காணப்படவில்லையாகலின் நேமிநாதவுரை தண்டியலங்காரத்திற்கும் முற்பட்டதாகும். தண்டியலங்காரம் 12-ம் நூற்றூண்டினிடைக் காலமாகிய இரண்டாம் இராசராசன் காலத்திலியற்றப்பட்டதாகும், என்பது எனது கூற்றுகும் (வீரசோழிய வுரையாசிரியர்காலம் பொழில் 10-ல் காண்க.) எனவே நேமிநாதவுரை 12-ம் நூற்றூண்டின் முற்பகுதியில் இயற்றப் பெற்றிருத்தல்வேண்டும்.

**நேமிநாத உரையாசிரியர் பெருமை.** ஏகாரம் எதிர்மறைப் பொருளில் வருவதற்குதாரணமாகத் “தூற்றுதே தூறவிடல்” எனத் திருக்கோவை உரையிலும் (செய். 110). வெள்ளாளர் காணி எனத் தெய்வச்சிலையார் உரையிலும், அம்மிப்பித்தும் துன்னூசிக்குடரும் சக்கரவர்த்தி கோயிலுள்ளுமில்லை, என்பதும், (பாடபேதத் தோடும்) குறுஞ்சூலி, குறுந்தடி, என்பனவும் கல்லாடர் உரையிலும் வந்துள்ளன நேமிநாத உரையிலும் காணப்படுகின்றன. “தம்முடைய தண்ணளியும் தாமும் மான்றேரும்” என்னும் சிலப்பதிகாரச் செய்யுளை இவ்வாசிரியர் இருதிணையுமெண்ணி உயர்திணையான் முடிவதற்குக் காட்டினர். அரும்பதவுரைகாரரும் இக்கருத்தே வுடையவர். இவர்கள் கருத்தை சேனவரையர் மறுத்தனர் (சொல். சூ. 52.) தெய்வச்சிலையார், கல்லாடர் முதலியோர் நன்னூல் ஆசிரியர்க்கும் பிற்பட்டவராவர். இவ்வாசிரியர்களுக்கு நேமிநாத வுரையாசிரியர் முற்பட்டவரன்றியும் இளம்பூரணவடிகள் காலத்திற்கு அணுகிய காலத்திருந்தவராவர். இவர்களுக் கிடைப்பட்ட காலம் 50, 60 வருடங்களுக்கு மேற்படாதெனலாம். இவ்வுரையில் காணப்

படும் உதாரணங்கள் எல்லாம் இளம்பூரணவடிகள் உரையிற் கண்டவைகளாகும். சேனாவரையரால், உரையாசிரியர் கூறிய தாகும் என மறுக்கும் பகுதி, இவ்வுரையில் காணப்படும் எனவே ஆராய்ச்சிக்கு இவ்வுரை ஏற்றதாகும்.

(தொடரும்.)

---

# வரருசி கதை.

பண்டிதர். R. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்,
வடமொழி ஆசிரியர், உரத்தநாடு உயர்தரக் கலாசாலை.

முற்றொடர்ச்சி துணர் 11. மலர் 5. பக்கம் 179.

## பத்தாம் அத்தியாயம்.

## போலி நந்தன்.

இல்லம் இகந்து இமயம் ஏகிய வரருசியார் அடாதவேனிற் கண் ஐந்தீயிடை நின்றும், காரினும் பனியினும் நீர்நிலை நின்றும் அருந்தவம் புரிந்தார். தவம் கண்டு மகிழ்ந்த தழல்புரை சடையரும், நானிலம் புகழ அவர்க்கு நவவியாகரணமும் நவில அருளினர். அதற் பின் அவருக்குப் பாணினியின் அட்டாத்தியாயி பளிங்குபோல் விளங்கிற்று. உவகையுடன் அவர் ஊருக்கு ஓடி வந்தார். பெற்றதாய்க்கும் பெரியோர் தமக்கும் உற்ற நல் வணக்கம் உவந்து புரிந்தார். பெறற்கரும் ஆசிகள் பெற்றதும் மனைவியின் அச்செயல் மரபுளியறிந்தார். இன்பமும் வியப்பும் எய்தலோடவர்க்குப் பன்னிமேற் காதல் பன்மடங்காயது. வர்ஷாசாரியர் வரன்முறை வழாது இலக்கணம் உசாதற்கு இசைந்தருளினர். வரருசியும் அதை வழுவாதோத, முருகன் அருளால், முன்முன் விளங்கலின், ஆசிரியர்க்கது பழைய பாடமே போறப்பட்டது. அவர் வாருசியார்க்கு வாழ்த்துரை பலவும் வழங்கினர். வரருசியார், ஐந்திரம் ஒழிய, இனிப் பாணினி இலக்கணமே உலகிற் பயின்றுவரும் எனத் தம் நுண்

னுணர்வால் உணர்ந்து அந்நூற்சூத்திரங்கட்கு ஓட்டியும்வெட்டியும் உரைக்கும் 'வார்த்திகம்' என்னும் வான் உரைகண்டார். ஆசிரியரும் அஃது அமைவுடைத்தென அறிவுறுத்தருளினர்.

இனி, வியாடீந்திரதத்தர்கள், வேண்டிய கலையெலாம் விளங்கக் கற்றனர். அதனால் குருகாணிக்கையைக் கொடுக்கக் குறித்தனர். வர்ஷாசாரியரோ 'கோடி பொன்னைக் கொடுக்க' என்றார். அவர் ஆணையைத் தலைமேற்கொண்டு, தனியிடம் சென்று, தருக்கித்தனர். போதும் வெறுக்கையுடையோமெனினும் நமக்கு இவ்வளவு பொன்னும் நல்குதற்குளதோ? ஆதலின் நந்தவேந்தன்பாலே நணுகல்வேண்டும். அவன்றான் தொன்று தொட்டுத் தொண்ணூற்றொன்பது கோடி பொன்னென்னும் தொலையாச் செல்வத்திற்குச் சொல்லும் தலைவனுமுளான். பிறர்பால் அத்தொகை பெறுதல் அரிது. மற்றும், அத்தொகை பெறுதற்கு, வரருசியின் துணையும் வாய்க்கவேண்டும் என முடிவு செய்தனர்.

வரருசியாரை உடன்வரவழைத்துத் தம் கருத்தைத்தெரித்தனர். தெரித்ததோடன்றி 'நந்தன் உபகோசையைத் தன் தங்கையென நவின்றுளானன்றே? அம்முறைபற்றி நீ அம்மன்னவனுக்கு மைத்துனன் ஆவாயன்றோ? ஆதலால், நீ வந்து கூறின் வரும்படி குறையாது. உன்குணநலம் பற்றிக் கூடவே தருவன்; வருக' என அழைத்தனர். வரருசியாரும் 'நல்லது' என்று அவருடன் நடந்தார். 'நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்' என்பதுபோல, மூவரும் அரண்மனை மேவா முன்னமே, 'நந்தன் வீந்தனன்' என்னும் நடுங்கு சொற் கேட்டனர். அரண்மனைதன்னில், அரசியற் குழப்பம் அன்னார் துயரொடும் அரும்பிற்று. செய்வகை அறியாது அன்னவர் சின்னேரம் திகைத்திருந்தனர்.

அப்போது, யோகசித்தியில் ஏற்றம்பெற்ற இந்திரதத்தன் 'நான் உயிரிழந்த இந்நந்தன் உடம்பிற் புகுந்தெழுவேன். அந்நொடியே வரருசி வந்து, பொருள்குறித்து இரத்தல்வேண்டும். நானும் உடனே நல்குவேன். நான் திரும்பும்வரை, வியாடி என் வெற்றுடம்பைப் போற்றி வரவேண்டும்,' எனத்திட்டம் செய்தான். திட்டம் செய்த இந்திரதத்தன் திடுமெனத்தன் உடம்பு நீத்தான். அந்நொடியே நந்தமன்னனும் கதுமெனக் கதித்தெழுந்தான். மாண்ட மன்னன் மீண்டு எழவே, குடி

படைக்குக் கொண்டாட்டமாயிற்று. வியாடி ஓர் பாழுங்கோயி லில் இந்திரதத்தன் வெற்றுடம்பைப் போற்றிவந்தான். அந் நேரத்தில், வரருசியார், அரையன் மாட்டணுகி, ஆசிகள் பல கூறி, குருகாணிக்கைக்காகக் கோடி பொன்தர வேண்டினன். அரசனும், சகடாலன் என்னும் அமைச்சனை அழைத்துப் பொன்தரப் பணித்தனன்.

இச்சகடாலன் என்பானோ, அமைச்சர்கட்குரிய இலக்கண மெல்லாம் அமைவரக் கொண்டவன். நந்தன்பால் நனிமிக நண்புகொண்டவன். அரசோம்பலே அவன் அருங்கடனாகும். இத்தகைய மதிமந்திரி, இறந்தவன் உடன் எழுந்தவாறும், இரப்பாளன் உடன் போந்தவாறும், கோமகன் கோடி பொன் உடன்தரக் குறித்தவாறும் உளத்தில் ஒக்க உன்னி, உண்மை புணர்ந்தான். அறிஞரால் அறியப்படாததோர் அருமறையும் உளதாமோ? அவன் இறைவன்பால் இதோ தருகிறேன் என இயம்பி, இப்பால்வந்து, 'என்னே! நந்தன் மைந்தனோ நனிமிக இளையன். இவ்வரசோ பல பகைவரையுடைத்து. நந்தன் மைந்தன் நன்கு பெரியனும்வரையும், இப்போவி நந்தனைப் போற்றிக் காத்தலே என் உடம்பொடுபட்ட கடமையாகும்' என எண்ணினன். வரருசியாரைச் சிறிது பொறுத்திருக்கக் கூறிவிட்டு, ஒற்றர்களை அழைத்து, அன்று அவ்வூரிற்காணும் பிணம் யாவையும் உடனே எரிக்க உத்தரவிட்டான். ஒற்றர்கள் ஓடி உடனதைப் புரிகையில், பாழுங்கோயிலில் பாதுகாக்கப் படும் பிணத்தையும் பிடுங்கி எரித்துத் தீர்த்தனர்.

வரருசியார் வழங்கக் குறித்த பொன்னை வாங்க முனைகை யில், மூதறிஞன் சகடாலன் மொழிவதானன். 'அந்தணிர், அடக்கமே தங்கட்கு அணிகல மன்றோ? சற்றே பொறுத்தருள் புரிவீர். வினைபுரிவார் யாவரும் வேந்தன் உயிர்த்தெழுந்த மகிழ்ச்சியால், விழாவயர்கின்றனர். விரைவில் தருவேன். வெகுளற்க' என வேண்டினன்.

இன்னன நிகழ்ச்சிகள் நிகழுங்காலை, வியாடி ஓடோடியும் வந்து 'முறையோ! முறையோ!! எனப் புலம்பினன். புலம்புதற் காரணம் யாதென வினவ, 'ஐயோ! அந்தணன் ஒருவனை அநி யாயமாய்க் கொன்று விட்டனரே! அரசே, இது உம் அரசுக்கு அடுக்குமா? யோக நிட்டையுடன் இருந்த அவனை இறந்தவன் என்று எடுத்துக் கொடுபோய் எரித்து விட்டனரே! இத்தீவினை யாரைச் சுடுமோ!' எனக் கதறிப் புலம்பினன்.

புலம்பொலி கேட்டதும் பொலிநந்தற்குத் துயரால் ஓர் வகைத் துடிப்பு நிகழ்ந்தது. உய்த்துணர்ந்தான் இதனையும் உழையிருந்த சகடாலன் பொலிநந்தன் தன் புத்துடம்பில் நிலைபெற்றான் என்பதை நிலைவரமாகத் தெரிந்த பின்னரே, சகடாலன் தேடிவந்து வரருசியார்க்குக் கோடி பொன்னையும் கொடுத்தனுப்பினான். சகடாலன் சென்ற சற்று நேரத்தில், பொலிநந்தன் பொதுவிடம் நீங்கி, வியாடியை வேறு தனியிடம் நோக்கி விரைந்தழைத்தேகினான்.

## கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரிக்கு யுவ, ஆவணித்திங்களின்போது நன்கொடையுதவிய அன்பர்களின்பெயரும் விவரமும்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| **திங்கள் நன்கொடை.** | | | | |
| திரு. சித்த வயித்தியசரபம் Dr. ஆ. சோதிபாண்டியன் அவர்கள், | தஞ்சை | 5 | 0 | 0 |
| ,, க. நடராசன் B.A.,B.L., ,, | ,, | 5 | 0 | 0 |
| ,, L. மார்க்கசகாயம்பிள்ளை B.A., ,, | கரந்தை | 3 | 0 | 0 |
| ,, நே. அ. அனந்தவிசயமுதலியார், ,, | ,, | 1 | 8 | 0 |
| ,, M. S. மணிஐயர், பம்பாய் ,, | ,, | 1 | 0 | 0 |
| **ஆண்டு நன்கொடை.** | | | | |
| ,, ரா. ப. இராமசாமிப்பிள்ளை ,, | சென்னை | 35 | 0 | 0 |
| ,, நா. கந்தசாமிப்பிள்ளை ,, (ரூ. 100ல் 4வது தவணை) | தஞ்சை | 10 | 0 | 0 |
| ,, T. S. சபாபதிபிள்ளை B.A., | கணபதிநகரம், ,, | 5 | 0 | 0 |
| ,, வ. அழகர்சாமி நாயடு B.A.,B.L., ,, (ரூ. 5ல் 2வது தவணை) | ,, | 4 | 0 | 0 |
| ,, T. O. பாலசுந்தரம் பிள்ளை அவர்கள் | கரந்தை | 5 | 0 | 0 |
| ,, வே. கோவிந்தசாமி நாயடு ,, | ,, | 2 | 0 | 0 |
| ,, சீனிவாச கோபாலையங்கார் ,, | ,, | 1 | 0 | 0 |
| ,, சீனிவாசன் ,, | ,, | 1 | 0 | 0 |
| ,, S. தங்கவேல் பிள்ளை B.A., ,, | ,, | 1 | 0 | 0 |
| ,, R. அருணாசலம் பிள்ளை ,, | ,, | 1 | 0 | 0 |
| ,, அ. பொன்னண்ணாக்களத்தில்வென்றூர் ,, | | 3 | 0 | 0 |